பக்கங்கள்: பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2040 தை 30 வியாழக்கிழமை (12.02.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:078

## இலங்கையில் மக்கள் அழியும் விவகாரம்

# பாதுகாப்புச் சபைக்கு வராததால் போர் நிறுத்தம் கோர முடியாது!

## ஐ.நா.செயலாளர் பான் கீ-மூன் சொல்கிறார்



ஜெனீவா, பெப்ரவரி12

இலங்கையில் நடைபெறும் போரினால் பெரும் இரத்தக்களரி உண்டாகி வருகின்றபோதிலும், அந்த நாட்டின் விவகாரம் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாததால், அங்கு போர் நிறுத்தம் செய்யுமாறு அரசாங்கத்தை நான் கோர முடியாது.

இவ்வாறு தெரிவிக்கிறார் ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீன்- மூன்.

இலங்கையில் நடைபெறும் போரினால் ஏற்படும் பாதிப்புக்கள் குறித்த விவரங்கள் குறைவாகவே வெளிப்படுத்தப்படுகின்றன என்று தெரிவித்த மூன் -

தாம் நாடுகளின் இறைமையை மதிப்பவர் என்றும் ஒரு கட்டத்தில் கூறினார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு வலயங்கள் குறித்து அறிய ஐ.நா. அதிகாரி விரைவில் வருகிறார்

நியூயோர்க், பெப்.12

ஐ.நா.செயலாளர் நாயகம் பான் கீன் மூனின் அரசியல் பிரிவு இயக்குநர் விரைவில் இலங்கை வரவிருக்கிறார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே அரசு அமைத்துள்ள மக்கள் பாதுகாப்பு வலயத்தை சர்வதேச (16 ஆம் பக்கம் பார்க்க)

## பொதுச் செயலாளரின் நிலைப்பாடு தவறு; பாதுகாப்புச் சபையின் தலைவர் மறுக்கிறார்

நியூயோர்க், பெப்.12

இலங்கை விவகாரம் ஐ.நாவின் பாதுகாப்புச் சபை நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்படாமையால் அந்த நாட்டில் தம்மால் போர் நிறுத்தத்தைக் கோர முடியவில்லை என்று பொதுச் செயலாளர் பான் கீன் மூன் கூறியது ஏற்புடையதல்ல.

இவ்வாறு மறுத்துரைத்திருக்கிறார் பாதுகாப்புச் சபையின் இந்த மாதத்துக்கான தலைவர் யுகியோ டக்காசு.

நாடு ஒன்றினது அமைதி மற்றும் பாதுகாப்புக்குக் குந்தகம் ஏற்படும் போது, அது குறித்து சர்வதேச சமூகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரும் மிகவும் முக்கியமான பொறுப்பு, ஐ.நா. சாசனத்தின் கீழ் அதன் பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டுள்ளது - என்றார் பாதுகாப்புச்சபையின்தலைவரான ஜப்பானைச் சேர்ந்த யுகியோ டக்காசு. (அ)

## மக்களுக்கான பாதுகாப்பு வலயத்தில் சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம்

### விடுதலைப் புலிகள் வலியுறுத்து

கொழும்பு,பெப்.12

வன்னியில் சர்வதேச சமூகத்தின் கண்காணிப்பின் கீழ் பொதுமக்களுக்கான பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட வேண்டுமென விடுதலைப் புலிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் மற்றும் அவர்களுடன் செல்பவர்கள் உட்பட பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகவும் சர்வதேச பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பாளர்களைப் சர்வதேச சமூகம் பயன்படுத்த வேண்டும் என்றும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

'தமிழ் நெற்' இணையத்தளத்திற்கு விடுதலைப் புலிகளின் புதுக்குடியிருப்பு பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பருதி இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார். (13 பக்கம் பார்க்க)

## நோயாளர்கள், வைத்தியசாலைகள் மீது தாக்குவதை இனியாவது நிறுத்துங்கள்!

### இருதரப்பிடமும் கேட்கிறது செஞ்சிலுவைக்குழு

கொழும்பு, பெப்.12

முல்லைத்தீவு புதுமாத்தளன் மருத்துவமனை மீது திங்கட்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 16 பொது மக்கள் கொல்லப்பட்டமையை செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு உறுதி செய்துள்ளது.

நோயாளர்களையும் மருத்துவப் பணியாளர்கள் மற்றும் மருத்துவமனைகளையும் விட்டு விடுமாறு இரு தரப்பையும் கெஞ்சிக் கேட்டுள்ள செஞ்சிலுவைக் குழு, ஜனவரி 29 ஆம் திகதிக்குப் பின்னர் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு உணவு விநியோகிக்கப்படவில்லை யெனவும் தெரிவித்துள்ளது.

புதுமாத்தளன் மருத்துவமனை மீது திங்கட்கிழமை இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் 16 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

(13 பக்கம் பார்க்க)

உள்ளே கல்விச்சுடர்
தரம் 5 மாணவருக்கான
தயார்படுத்தல் பரீட்சை
வினாத்தாள் -I

## தமிழர் கொலைகளைத் தடுத்துநிறுத்த மலேசிய அரசு தலையிட வேண்டும்

### அந்நாட்டு அமைச்சரிடம் தமிழ் அமைப்புகள் கோரிக்கை

கோலாலம்பூர், பெப்.12

இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொல்லப்படுவதைக் கண்டித்து மலேசிய அரசு உடனடியாகத் தலையிட்டு போரை நிறுத்த வேண்டும் எனக் கோரி மலேசிய தமிழ் மக்கள் சார்பில் அந்நாட்டின் வெளி யுறவுத்துறை அமைச்சர் டத்தோ சிறீ டாக்டர் ராய்ஸ் யாத்தியிடம் நேற்றுமுன்தினம் மனு ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மலேசிய இந்தியக் காங்கிரஸ் (ம.இ.கா.) தலைமைச் செயலாளரும் மனிதவள அமைச்சருமான டத்தோ டாக்டர் எஸ்.சுப்பிரமணியம் தலைமையில் சென்ற குழுவினர், அமைச்சர் ராயிசிடம் இந்த மனுவை கையளித்தனர்.

உலகத் தமிழர் நிவாரண நிதியத்தின் அறங்காவலர் சட்டத்தரணி பசுபதி சிதம்பரம், மலேசிய இந்தியக் காங்கிரஸ் இளைஞர் பிரிவு (16 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத்தமிழரைக் காக்கக் கோரி டில்லியில் நாளை வைகோ உண்ணாவிரதம்

புதுடில்லி, பெப்.12

இலங்கையில் தமிழர்களைப் பாதுகாக்கக் கோரி ம.தி.மு.க. சார்பில் இரண்டாயிரம் தொண்டர்களுடன் டில்லியில் நாளை முதல் உண்ணாவிரதம் இருக்கப் போகிறேன் - என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் போரை நிறுத்துமாறு வலியுறுத்தி 1,460 ஈழ அகதிகள் தமிழகத்தில் உண்ணாவிரதம்

சென்னை, பெப்.12

இலங்கையில் போரை நிறுத்த வலியுறுத்தியும் ஈழத் தமிழர் படுகொலையைத் தடுத்த நிறுத்தக் கோரியும் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இலங்கை அகதிகள் நேற்று உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினர்.

தோப்பூர், வனியார், ஹரூர், தர்மபுரி, கேசர்குலிஹல்லா, நாகவத்திடம் ஆகிய (16 ஆம் பக்கம் பார்க்க)

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க!

உலகநாடு ➡ கொழும்பு ➡ யாழ்ப்பாணத்திற்கான துரித தபால்கள் பொதிகள் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

**திருமுருகன் கொம் நெற்**

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
96, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. (கல்வியங்காடு ப.நோ.கூ.சங்கம் முன்பாக)

New Branch

**TCN EXPRESS**

2B, Nelsan Place, Colombo -06

FedEx யாழ்மாவட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட முகவர்




உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடைவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகளை பெற்றுக்கொள்ளலாம்.


## இதய அஞ்சலி

*எமது பாடசாலை ஆசிரியர் ந.புஸ்பராஜ்ா அவர்களின் அன்புத் தாயார்*

**திருமதி மகேஸ்வரி நடராஜா**

*அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக் கின்றோம்.*

ஆசிரியர் நலன்புரிச் கழகம்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை,
கந்தரோடை, சுன்னாகம்

## மரண அறிவித்தல்கள்

### குமரையா லோகேஸ்வரன்

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட குமரையா லோகேஸ்வரன் 09.02.2009 அன்று சவுதிஅரேபியாவில் காலமானார்.

அன்னார் நீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான குமரையா - இரத்னம்மா தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-கற்பகப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற ரகுசுந்தரம் மற்றும் இராஜேஸ்வரன் (லண்டன்), தங்கேஸ்வரன், நாகேஸ்வரி (கனடா), தங்கேஸ்வரி (கனடா), இரட்ணேஸ்வரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் இராஜலட்சுமியின் மைத்துனரும் சிவப்பிரியா (கனடா), செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மதிமுகராஜாவின் (கனடா) அன்பு மாமனாரும், கிஷோவின் (கனடா) அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

தகவல்:
செந்தூரன் (மகன்)

### கந்தையா குமாரசுவாமி



புத்தூர் பெரிய தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், பண்டாரக்குளம், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா குமாரசுவாமி நேற்று (11.02.2009) புதன்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-இராசநாயகி தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை-தங்கம்மா தம்பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற சாந்தநாயகியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரன் (சட்டத்தரணி), Dr.மகேசன் (யாழ்.போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தந்தையும், அமரர்களான திருஞானசம்பந்தர், திருமதி நாகரட்ணம் மற்றும் பத்மநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் , அமரர் வேல்நம்பி, சரஸ்வதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனரும், Dr.நல்லைநாதன்(தேசிய இரத்த வங்கி,கொழும்பு), Dr. அருட்செல்வி(தேசிய வைத்திய சாலை, கொழும்பு), மஞ்சுளா (கனடா),Dr.சுதர்சன்(கனடா) ஆகியோரின் பேரனும், செந்தூரன், அபிராமி, அர்ச்சனா ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2009) வியாழக்கிழமை நண்பகல் 12மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

21, பண்டாரக் குளம்,
நல்லூர்.

தகவல்:
சட்டத்தரணி கு.விக்னேஸ்வரன்,
வைத்திய கலாநிதி Dr.கு.மகேசன்
(பிள்ளைகள்)

## சாரணியர்களுக்கான வாழ்த்து மடல் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.12

இலங்கை சாரணியர் மன்றத்தின் யாழ். பிரிவின் ஏற்பாட்டில் சிந்தனை நாள் வாழ்த்து மடல் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் இடம் பெறவுள்ளது.

அகில உலக பெண் பிள்ளைகளின் சமூகம் கூறுவது, நாங்கள் எமது ''உலகை தொற்றுநோயில் இருந்து காப்போம்'' என்ற தொனிப்பொருளில் இந்தப் போட்டி இடம் பெறும்.

இந்தப் போட்டியில் கலந்துகொள் வோர் ஏ4 கடதாசி, கழிவுப்பொருள்கள், வர்ணங்கள் ஆகியவற்றைக் கொண்டு வரவேண்டும் என்று மாவட்ட ஆணையாளர் திருமதி என்.தர்மகுலசிங்கம் தெரிவித்தார். (1)

## ''மூலிகைத் திறவுகோல்'' நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், பெப்.12

வைத்திய காலாநிதி சே.சண்முகராஜா எழுதிய 'மூலிகைத்திறவு கோல்' நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.பல் கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாநகர சபை பிரதம சித்த வைத்திய அதிகாரி வைத்தியர் ப.சுரேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக விவசாய உயிரியல் துறைத் தலைவர் டாக்டர் கு.மிகுந்தன் நிகழ்த்துவார்.

நூல் வெளியீட்டுரையை வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் நூல் அறிமுகவுரையை யாழ்.பல்கலைக் கழக சித்த மருத்துவப் பிரிவு பேராசிரியர் சு.பவானி, தாவரவியற்துறை, விஞ்ஞான பீட தலைவர் திருமதி என்.ரவிமன்னன் ஆகியோரும் நிகழ்த்துவார்கள். (7)

## சண்டிலிப்பாய் பிரதேசத்தில் 61 பேருக்கு வாழ்வாதார உதவி

வண்ணை, பெப்.12

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள ஒன்பது இடம்பெயர்ந்தோர் முகாம்களில் தங்கியுள்ள 61 பயனாளிகள் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட இருக்கின்றனர்.

இவர்களில் முதற்கட்டமாக 7 பேர்களுக்கு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக மண்டபத்தில் வைத்து வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.ஓ.எம்.நிதி அனுசரணையுடன் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்தும் வைபவத்தில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (1-160)


**TALENT Institute**
**Karaveddy**

பாலர் முதல், A/Lவரையான வகுப்புகளுடன் பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களுடன் மற்றும் அலுவலர்களுக்குமான

Spoken English With Grammar and Singalam
By: S.Rasanajagam

ஆரம்பம் 14.02.2009 12.30P.m

அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

**தேவை**

யாழ்.திருநெல்வேலி தபால் கட்டைச் சந்தியிலுள்ள தனியார் கடை ஒன்றுக்கு (Mother and BABY Care) பணிப்பெண் ஒருவர் தேவை.

சம்பளம்நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: இல.108/1, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் 14.02.2009 விநியோகிக்கப்படும்.
பதிவுகளை மேற்கொள்ளவும்.

★ றாஜீவ் நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
★ மதுரா ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
★ P.ரவி சாவகச்சேரி.
★ சிற்றி பாம் றேடேர்ஸ் கல்வியங்காடு.
★ [illegible] - சிவலிங்கப் புளியடி.


## கண்ணீர் அஞ்சலி



*எமது மகாவித்தியாலயத்தின் ஆசான் கழகத் தலைவர் இ.தர்மரத்தினம் அவர்களின் தாயார்*

**திருமதி இராமநாதன் வள்ளியம்மை**

அவர்கள் இறைபதமடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

பாடசாலைச் சமூகம்
யா/சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், குருநகர், யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி இராமநாதன் வள்ளியம்மை



நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் வள்ளியம்மை (10.02.2009) செவ்வாயன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா இராமநாதனின் (ஓய்வுபெற்ற பரிசாரகர்-நெடுந்தீவு) அன்பு மனைவியும், துரைசிங்கம் (ஓய்வுபெற்ற பரிசாரகர், நெடுந்தீவு), காலஞ்சென்ற இரத்தின சிங்கம், கனகரத்தினம் (வவுனியா), நாகேஸ்வரி (வவுனியா), அரசரத்தினம் (நோர்வே), தர்மரத்தினம் (ஆசிரியர், யாழ்/சென்.ஜேம்ஸ் ம.வி.) ஆகியோரின் பாசமிகு தாயாரும், றஞ்சிதமலர் (நெடுந்தீவு), ஜெயலக்சுமி (ஜேர்மனி), வனிதரத்தினம் (வவுனியா), லோகேந்திரன்(வவுனியா), சத்தியபாமா (நோர்வே), தயாநிதி (ஆசிரியர், யா/இந்து ஆரம்பப் பாடசாலை) ஆகியோரின் மாமியாரும், அன்ரன்லினகே - சுமித்திரா, பாக்கியநாதன்-மகேஸ்வரி, யசோமதி - நடராசா, சாந்தரூபன் - சிவாஜினி, யசோதினி - கண்ணன், பாஸ்கரன் - யாழினி, மேருமதி - சுரேஸ், நவநீதன், கலைநிதி - நேசன், நிஷாந்தநீதன், போகுலநீதன், பாமினி - சசியானந்தன், ரவிதாசன்-நர்மதா, யசிதாசன், தவபாலன், றஜீவ், துஷ்யந்தன், துர்ஷிகா, தருணிகா, தர்ஷிகா, சுஜிவன் ஆகியோரின் பேர்த்தியும், நதீஸ், சஹானா, டர்ஷன்,ரனுஷன், வர்ஷனா, டிவ்யா, டிஷாந்தன், ஹரிபிரசாத், பிரியா, திவ்யா, கோபிகா, சனூரன், சனூரிகா, மதுஷன், தர்மினி, தர்ஷிகன், கஜவர்சன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*19/1, சிவப்பிரகாசம் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
இரா.தர்மரத்தினம் (மகன்)

### அம்பிகாபதி இராமேஸ்வரன்



சாதக்கடவை, தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் பற்பை, வதிரியை வசிப்பிடமாகவும் மூர் வீதி, கொழும்பு 06ஐ தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட அம்பிகாபதி இராமேஸ்வரன் 07.02.2009 சனிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அம்பிகாபதி -நவமணி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தம்பையா-அன்னமுத்து தம்பதியரின் கனிஷ்ட மருமகனும் கனகாம்பிகை கௌரியின் அன்புக் கணவ்ரும் இராகவி (நெல்லியடி ம.ம.வி), ஆர்த்திகா (நெ.ம.ம.வி), அகியோரின் பாசமிகு தந்தையும் ஜெகதாம்பிகை, மகாதேவன், வாமதேவன் மற்றும் காலஞ்சென்றவர்களான பாலசுந்தரம், இராமச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் கங்காதரனின் (மத்திய மின்நிலையம், சுன்னாகம்) சகலனும் கமலாம்பிகையின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.02.2009) வெள்ளிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பற்பை வதிரி,
நெல்லியடி, தொ.பே.0779024109

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### திருமதி தில்லையம்பலம் மங்கையர்க்கரசி (அரசக்கா)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தில்லையம்பலம் மங்கையர்க்கரசி நேற்று (11.02.2009) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம்(இளைப்பாறிய தபாலதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருணாச்சலம் - தங்கம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான குணபாக்கியம், ஜெயலட்சுமி, தம்பாபிள்ளை, சோமசுந்தரம், விஜயசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நடேசன் (முன்னாள் பணியாளர், யாழ்.பல நோ.கூ.சங்கம், செயலாளர், சிறுப்பிட்டி ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தானம்), காலஞ்சென்ற இந்திராதேவி மற்றும் சுசீலா ஆகியோரின் தாயாரும் செல்வராணி, அருளானந்தம், கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், செல்வகுமார் (கொழும்பு), மோகன், திருவருட் செல்வன் (கனடா), உதயகுமார்(சுவிஸ்), ரோகினி (சுவிஸ்), வதனி(ஹொலண்ட்), சுவனி(சுவிஸ்), ராஜ்குமார் (லண்டன்), வாகினி(ஜேர்மன்), கபிலன் (இந்தியா), சஞ்ஜயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2009) வியாழக்கிழமை மு.ப. 11மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்க்ள் அனைவரும் ஏறீறுக் கொள்ளவும்.

*''ஈஸ்வரபதி'',*
*சேர்ச் வீதி, உடுவில்.*
*(சிங்கம் வீதி, உடுவில்)*

*தகவல்:*
*நடேசன் (மகன்),*
*சுசீலா(மகள்).*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## செஞ்சிலுவையை வெளியேற்ற முஸ்தீபு?

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை இலங்கையிலிருந்து வெளியேற்றவேண்டும் என்ற கோஷம் தென்னிலங்கையில் மிகப் பலமாக - பொங்கி - எழுந்துள்ளது. அந்தக் கோஷத்துக்கு மேலும் ஆதரவு தேடுவதற்காகவும் பிரசித்தப்படுத்துவதற்காகவும் கொழும்பில், நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது. அந்தப் பேரணியை நடத்திய தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் தனது கோரிக்கைக்கு முன்வைத்த காரணம் செஞ்சிலுவைக் குழு புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்றது என்பதாகும்.

இதற்குமுன்னர், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவும் செஞ்சிலுவைக் குழுவை நாட்டை விட்டுத் துரத்தவேண்டும் என்று வலியுறுத்திச் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார். அவரும் செஞ்சிலுவைக் குழுவினர் புலிகளுக்கு ஆதரவாகவும் படையினருக்கு எதிராகவும் செயற்படுகின்றனர் என்ற குற்றச்சாட்டையே தூக்கிப் பிடித்தார்.

மொத்தத்தில் இனவாதத்தில் திளைத்து, யுத்த வெறியில் நின்று சன்னதம் ஆடும் தென்னிலங்கைத் தரப்புகள் எல்லாமே, இங்குள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சர்வதேச அமைப்புகளில் பணி யாற்றும் பிரதிநிதிகள், அதிகாரிகள் தமக்குச் சார்பாகவே செயற்படவேண்டும் என்று விரும்புகிறார்கள். இல்லையெனில் அவர்களுக்கு சந்தேக (புலி) முத்திரை குத்துகிறார்கள்.

அதாவது, தமிழர்களின் பிறப்புரிமைகளை வழங்காது, அவர்கள் இரண்டாம் தரப்பிரஜைகளாக - தாம் போடும் அரசியல் மற்றும் நிர்வாகப் பிச்சைகளை - ஏந்தி வாழவேண்டும் என்ற தமது கோட்பாடுகளையும் கொள்கைகளையும் ஏற்றுக்கொண்டு பிறநாட்டவரும் அதற்குத் தாளம் போட வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்கள்.

இந்தகையோரின் வாக்குப் பலத்தினைக் கொண்டு ஆட்சிக் கட்டில் ஏறிய மஹிந்தரின் அரசும், அந்த நச்சு வழியிலேயே ''வீறுநடை'' போடுகிறது. தமிழர்களை அடக்கி, ஒடுக்கி, தாம் பெரும்பான்மை என்ற ஒரே காரணத்துக் காக சிங்களத்துவம் மேலாதிக்கம் செய்ய வேண்டும் என்ற இலக்குடன் ஆட்சி நடத்துவதால், அரசும் இந்த நாட்டில் வந்து பணிபுரியும் வெளிநாடுகளைச் சேர்ந்த அதிகாரிகள் எல்லோருமே, தமது உண்மை, நீதி என்ற இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு தமக்கு ஆதரவாகச் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கிறது; விரும்புகிறது.

அந்த விருப்பத்தின் ஒரு துளிதான், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலித்த கோஹண கூறியுள்ள (அல்லது கோரியுள்ள) கருத்து. புதுக்குடியிருப்பு வைத்தியசாலை மீது இராணுவம் தாக்குதல் நடத்தியதாகத் தகவல் வெளியிட்டதற்காக, ஐ.நா.சபையின் கொழும்புச் செயலகம் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் வருத்தம் தெரிவிக்க வேண்டும் என்று கோரியுள்ளார் கோஹண!

வன்னியில் நடைபெறும் உண்மைகள் - அரசின் அட்டூழியங்கள் - வெளியே வந்துவிடக் கூடாது என்பதற்காகவே வன்னிப் பிரதேசத்தில் பணிபுரிந்த வெளிநாட்டுத் தொண்டு நிறுவனங்கள் யாவும் பல மாதங்களுக்கு முன்னரே ''பாதுகாப்பு'' என்ற பூண் போடப்பட்டு வெளியேற்றப்பட்டன என்பது எல்லோருக்கும் தெரிந்ததும் புரிந்ததுமாகும்.

அந்தவகையில், போரின் மத்தியிலும் அங்கு மனிதாபிமானப் பணிகளைச் செய்வதற்கென அனுமதிக்கப்பட்டிருப்பவை ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத் திட்டமும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவும் மட்டுமே.

அவை தாமாக வெளியேறிவிடக்கூடாது, தமது அளப்பரிய பணிகளில் இருந்து பின்வாங்கிவிடக்கூடாது என்பதே வன்னியில் போர் அக்கிரமத்துக்குள் சிக்குண்டிருக்கும் ஒவ்வொரு தமிழ்ப் பிரஜையினதும் ஆராத வேண்டுதலாக இருக்கின்றது.

வெளிநாட்டவர்கள் அல்லது வெளிநாடுகள் உண்மையைக் கூறித் தமது நோக்கத்துக்கு ஊறுவிளை வித்துவிடக்கூடாது; சர்வதேச மட்டத்தில் தமது பொட்டுக்கேடு அம்பலமாகிவிடக்கூடாது என்ற ஒரே நோக்கத்துடன், அளப்பரிய மனிதாபிமானப் பணியை - காயமுற்றவர்களைக் காப்பாற்றும் பணியை -ஆற்றும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவை வன்னியிலிருந்து வெளியேற்றி விட்டு, காயமுற்றுச் சிகிச்சை வசதி கிடைக்காமல் மரணிக்கும் அப்பாவி மக்களின் எண்ணிக்கையை அதிகரிக்க 'அ' கரம் எழுதுகிறதா அரசு?

போர்முனையில் காயமுற்றவர்களைக் காப்பாற்றவேண்டும் என்ற அடிப்படை நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்ட செஞ்சிலுவைச் சங்கம், இப்போது போரில் காயப்படும் அப்பாவி மக்களின் உயிரைக் காப்பாற்றும் உன்னத மனிதாபிமானப் பணியை உலகளாவிய ரீதியில் ஆற்றி வருகிறது. மனித உயிர்கள் எந்த நாட்டவர், இனத் தவர் , மதத்தினர் என்ற வேறுபாடு இன்றி காப்பாற்றப் படவேண்டும் என்ற மகோன்னத மனிதாபிமானமே செஞ்சிலுவைச் சங்கத்தின் அடிவேர்.

குடிமக்கள் ஆழ்ந்த வன்முறைக்கு அதிக அளவில் இலக்காகி வரும் இக்காலத்தில், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது கவனத்தை அவர்கள் மீதே குவித்துள்ளது. பகைமைகளின் நேரடி விளைவுகளிலிருந்தும், போர்களிலிருந்தும் அவர்களுக்கு எதிராகப் புரியப்படும் வன்முறைச் செயற்பாடுகளில் இருந்தும் மக்களைப் பாதுகாப்பதே செஞ்சிலுவைக் குழுவின் பிரதான பணி என்பதனை அவதானிக்க முடிகிறது.

அத்தகைய ஓர் இயக்கத்தை, வன்னிப் போர்ப் பிரதேசத்தில் இருந்து வெளியேற்றுவதற்கான கோஷங்களும், கோரிக்கைகளும், முஸ்தீபுகளும் முரண்மிக்கவையாகும். பூனை கண்ணை மூடிக் கொண்டால் பூலோகமே இருண்டு விட்டதாக கருதுவதா? உண்மையைச் சொல்வதற்காக, அந்த உண்மை தங்களை உறுத்துகிறது என்பதற்காக, செஞ்சிலுவைச் சங்கச் சர்வதேசக் குழுவை போர் பிரதேசமான வன்னியில் இருந்து வெளியேற்ற அடிகோலப்படுவது அபத்தமாகும்.

அந்த அமைப்பை 'பொய்யனாக்கி' கரிபூச முயல்வது, சந்திரனைப் பார்த்து நாய் குரைத்த நிலைக்கு ஆளாக்கினும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

# யாழ்ப்பாணத்தில் அவசர சேவைகளின் அபிவிருத்திக்கு அமெரிக்கா தொடர்ந்தும் உதவிகளை வழங்கும்

### பிரதித்தூதுவர் ஜேம்ஸ் மூர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்.குடாநாட்டு மக்களின் அவசர சேவைகளை அபிவிருத்தி செய்வதற்கு அமெரிக்கா தனது முகவர் அமைப்புக்கள் ஊடாகத் தொடர்ந்தும் உதவிகளை வழங்கும் என அமெரிக்கப் பிரதித்தூதுவர் ஜேம்ஸ் ஆர் மூர் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்துக்கான அவசர மருந்துவ சேவையை அங்குரார்ப்பணம் செய்து வைக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்றுக் காலை 9.30 மணிக்குப் பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் இந்த வைபவம் நடைபெற்றது.

மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அமெரிக்க பிரதித்தூதுவர் ஜேம்ஸ் ஆர் மூர் மற்றும் சர்வதேச மருத் துவக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் டொன்னி வூட்யாட் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபடுத்தப்படும் அம்புலன்ஸ் வண்டிகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்கள் இந்த வைபவத்தில் வை'த்து வழங்கப்பட்டன.

இந்த வைபவத்தில் உரையாற்றிய அமெரிக்கத் தூதுவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

இன்று இங்கு ஆரம்பித்து வைக்கப்படும் அவசர மருத்துவ சேவையானது இந்த மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் மிகவும் முக்கியமானதொன்றாக உள்ளது. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தவாறு யாழ்ப்பாண மக்கள் தமது அன்றாடப் பணிகளை முன்னெடுக்கின்றார்கள். அவர்களுக்குத் தேவையான அவசர சேவைகளை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. அரசு அல்லாத நிறுவனங்கள் மேற்கொள்ளும் இவ்வாறான திட்டங்களை நாம் ஊக்குவிக்கின்றோம். இந்தத் திட்டத்துக்கான உதவிகள் யு.எஸ்.எயிட் நிறுவனம் மூலம் வழங்கப்படுகின்றன. அமெரிக்க மக்களிடம் இருந்தே இந்த உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. இதனையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். இது போன்ற பல்வேறு உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க மக்கள் தயாராக உள்ளனர் - என்றார்.

இந்த வைபவத்தில் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர் என்.சிவராஜா ஆகியோரும் தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (50-9-51)

# வன்னி மக்கள் ஈவிரக்கமின்றிக் கொல்லப்படுவது 'மகா கொடுமை' என்கிறார் யு.என்.எச்.சி.ஆர் அதிகாரி

### 'பாதுகாப்பான பகுதிகளுக்கு மக்களைச் செல்ல அனுமதிக்குமாறு புலிகளிடம் கேட்டுள்ளோம்'

கொழும்பு, பெப்.12

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் மோதலில் சிக்குண்டுள்ள பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் ஈவிரக்கமில்லாமல் கொல்லப்பட்டு வருவதை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம்(யு.என்.எச்.சி.ஆர்) 'மகா கொடுமை' என்று வர்ணித் துள்ளது.

மோதல்கள் இடம்பெற்றுவரும் தீவுப் பிரதேசங்களில் இருந்து தப்பி வெளியேறிக் கொண்டிருக்கும் ஏறத்தாழ 1 லட்சத்து 50 ஆயிரம் மக்களுக்கு அவசர மனிதாபிமான நிவாரண உதவிகளை மேற்கொள்வதில் அகதிகளுக்கான ஐ.நா நிறுவனத்தின் உயர் ஸ்தானிகரும், பங்காளி அமைப்புகளும் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

இலங்கை அரசாங்கத்தையும் விடுதலைப் புலிகளையும், பாதுகாப்பான வலயங்கள் என்றழைக்கப்படும் இடங்களுக்கு மிக அருகில் கண்மூடித்தனமாக நடைபெறும் மோதல்களை நிறுத்தும்படி கோருகின்றோம் என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் பேச்சாளர் றொன் றெட்மொண்ட் ஜெனிவாவில் வைத்து பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

#### பரஸ்பரம் அங்கீகரிக்காத இடங்கள்

பாதுகாப்பு வலயங்கள் மோதலில் ஈடுபட்டுள்ளவர்களால் பரஸ்பரம் அங்கீகரிக்கப்பட்டவையல்ல. மேலும் அவை அவசியமான சர்வதேச முன் தேவைகளை நிறைவு செய்வதாகவும் காணப்படவில்லை. மனித உரிமைகள் இரு பகுதியினராலும் மீறப்பட்டும் வருகின்றன. இதனால் அங்கு சிக்குண்டு உள்ள 2 லட்சத்து 50 ஆயிரம் மக்களின் பாதுகாப்பு மேலும் பெரும் அபாயத்துக்குள்ளாகியிருக்கின்றது என்று குறிப்பிட்டார் ரெட்மொன்ட்.

புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் சிக்குண்டுள்ள ஆயிரக்கணக்கான மக்களின் அவசியமற்ற உயிரிழப்புக்கள், தொடர்ச்சியான துன்பங்கள் குறித்து நாங்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளோம் என்றார் அவர். சர்வதேச மனித உரிமை சட்டங்களை இரு தரப்பும் மதிக்காமல் செயற்படுவதனால் இரத்தக் களரி தொடர்ந்து இடம்பெறுவதாக உள்ளது என்றும் றெட்மொன்ட் கூறினார்.

மோதல் இடம்பெறும் பகுதிகளிலிருந்து வெளியேறிய சுமார் 13ஆயிரம் பேர் வவுனியா பிரதேசத்தில் பல்வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள் என்று தெரிவித்துள்ள அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் பேச்சாளர் மேலும் 5 ஆயிரம் பேர் இப்பொழுது இடம் பெயர்ந்து வந்து கொண்டிருப்பதாகவும் அடுத்து 24 அல்லது 48 மணி நேரத்தில் அவர்கள் வவுனியாவை வந்தடைவார்கள் எனவும் தகவல் கிடைத்திருப்ப தாகத் தெரிவித்துள்ளனர்.

சிக்குண்டுள்ள மக்கள் பாதுகாப் பான இடம் என்று கருதும் பகுதிகளுக்கு வருவதற்கு அனுமதிக்குமாறு விடுதலைப் புலிகளை அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனம் கேட்டிருப்பதாக றெட்மொன்ட் கூறியுள்ளார்.

இந்த எல்லா இடங்களிலும் குறைந்த அளவிலாவது சர்வதேச மனித உரிமை பிரமாணங்களைக் கடைப்பிடிக்கும்படி இலங்கை அரசை வற்புறுத்தியிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ப)

# யாழ்.மாவட்டத்தில் நேற்று முதல் 24 மணிநேர அவசர அம்புலன்ஸ் சேவை

### அமெரிக்க பிரதித்தூதுவர் ஆரம்பித்து வைத்தார்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.மாவட்டத்தில் அவசர மருத்துவ நிலைகளின் போது நோயாளர்களை அவர்களது வதிவிடங்களிலிருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான 24 மணிநேர அவசர அம்புலன்ஸ் சேவை நேற்றுப் புதன்கிழமை முதல் ஆரம்பமானது.

அமெரிக்கப் பிரதித்தூதுவர் ஜேம்ஸ் ஆர் மூர் இதனை வைபவரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

இந்தச் சேவையை யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்களம் ஒருங்கிணைக்கின்றது. இதற்கென மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அவசர அழைப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதனை அமெரிக்க பிரதித் தூதுவர் திறந்து வைத்தார்.

இது தொடர்பாக மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தவை வருமாறு:

அவசர நோய் நிலைகளில் இச்சேவையைப் பெறவிரும்புகின்றவர்கள் 110 அல்லது 222 4444 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ள முடியும். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் அவசர அழைப்புகள் ஒருங்கிணைப்பு நிலையம் 24 மணி நேரமும் செயற்படும். அங்கிருந்து சம்பந்தப்பட்ட பிரதேச அம்புலன்ஸ் வண்டிகளுக்குத் தகவல் வழங்கப்படும்.

யாழ்.மாநகராட்சி பிரதேசத்திலும், அதனை அண்டிய வலிகாமம் பிரதேசத்திலும் உள்ள நோயாளர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவர். ஏனைய பிரதேசங்களின் உள்ள நோயாளர்கள் அருகிலுள்ள பிரதான வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவர்.தேவையேற்படின் அவசர சிகிச்சைகளின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்படுவர்.

இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக பருத்தித்துறை, தெல்லிப்பழை, சாவகச்சேரி, சங்கானை, ஊர்காவற்றுறை வைத்தியசாலைகளின் அம்புலன்ஸ் வண்டிகளுக்கு அவசர முதலுதவி சிகிச்சைகளுக்கான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் பணியாளர்களுக்கும் அவசர முதலுதவி பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளன. அடுத்த கட்டத்தில் ஏனைய வைத்தியசாலை அம்புலன்ஸ் வண்டிகளுக்கு மருத்துவ உபகரணங்களும் பயிற்சியும் வழங்கப்படும்.

யாழ்.மாவட்டத்தில் இத்திட்டத்தை ஆரம்பிக்க உலக சுகாதார ஸ்தாபனமும், சர்வதேச மருத்துவக் குழுவும் உதவியளித்து வருகின்றன. ஆனால் அதனை சுகாதார திணைக்களமே தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

தற்போது வைத்தியசாலைகளுக்கு இடையிலான அம்புலன்ஸ் சேவைகளை நடத்துவதற்கே எமக்கு ஒதுக்கப்படும் எரிபொருளுக்கான நிதி போதாமலுள்ளது. இந்நிலையில் இச்சேவையை இப்போது இலவசமாக நடத்த முடியாதுள்ளது.

நோயாளர்களின் நலன்கருதி பலரின் வேண்டுகோளுக்கிணங்கவே இச்சேவையை நாம் ஆரம்பிக்கின்றோம். இச்சேவையை நீண்ட காலம் தொடர்ந்து நடத்தும் நோக்கில் நோயாளர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் எரிபொருள் செலவினங்களை ஈடுசெய்ய 300 ரூபா அறவிடப்படும். இவ்வாறு அறவிடப்படும் தொகை முழுமையாக எரிபொருள் கொள்வனவிற்கே பாவிக்கப்படும். இதன் மூலம் திணைக்களத்திற்கு எதுவித இலாபமோ அல்லது நட்டமோ ஏற்படாத வகையில் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் எரிபொருள் செலவீனங்களுக்காக போதிய நிதிவசதி கிடைத்தால் இத்திட்டத்தை இலவசமாக நடைமுறைப்படுத்துவதை பரிசீலிக்கலாம்.

இத்திட்டத்தைச் சீராக நடைமுறைப்படுத்தினால் இம் மாவட்ட மக்களுக்கு ஓர் சிறப்பான சேவையாக இது அமையும். எனவே இதனைச் சீராக நடைமுறைப்படுத்த அனைவரும் புரிந்துணர்வுடன் சுகாதாரப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வேண்டுகின்றோம். அவசரமான நோய்நிலைகளுக்கு மட்டும் அம்புலன்ஸ்களை அழைத்தால் நாம் அனைவருக்கும் இச்சேவையை சிறப்பாக வழங்க முடியும் - என்றார் அவர். (50-9-51)

## நாளை

| | |
|---|---|
| மாசி 01 | 13.02.2009 வெள்ளிக்கிழமை |
| திதி: | சதுர்த்தி பி.ப. 04.35 வரை |
| நட்சத்திரம்: | அத்தம் பி.இ. 12.45 வரை |
| சுபநேரம்: | 06.33 - 08.03 |
| ராகுகாலம்: | 11.03 - 12.33 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு.S.M.புவிராஜ் B.Sc. (Agri.) (Hons)

கடமையிலே கருத்தாய்
கண்ணியமே இலட்சியமாய்
நிர்வாகத்தில் நிபுணராய் திகழ்பவரே!

காலமது கைகூட
கணப்பொழுதினில் கைகூடியது
காத்திரமான இனிய பதவியாம்
வலய முகாமையாளர்.

05.02.2009 இல் வலய முகாமையாளராக பதவியுயர்வு பெற்ற எமது பிராந்திய முகாமையாளரை தொடர்ந்தும் பல பதவிகள் பெற்று நீடூழி காலம் வாழ வாழ்த்துகின்றோம்.

HNB ASSURANCE
For a brighter future

பணியாளர்கள்,
HNB Assurance PLC
பிராந்திய அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

### லெப்.கேணல் செந்தோழன் உயிரிழப்பு

கொழும்பு, பெப்.12

விடுதலைப் போராட்டத்தின்ஒளிப்பட ஆவணப்படுத்தலைச்சிறப்பாகச்செய்து வந்த லெப்.கேணல் செந்தோழன் வீரச்சாவடைந்துள்ளார்.

ஒளிப்படக் கலைப்போராளியும் பாடலாசிரியருமான லெப்.கேணல் செந்தோழன் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஒளிப்பட ஆவணப்படுத்தலை சிறப்பாக மேற்கொண்டவர். அத்துடன், தமிழீழ எழுச்சி இசைப் பாடல்களையும்எழுதியவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தமிழீழ இசைப் பாடகர் இசையரசன் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அறுபதுக்கும் அதிகமான இசைப் பாடல்களைப் பாடியுள்ள இவர் தமிழீழ எழுச்சிப் பாடகர் சாந்தனின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(202-201)

**படிவம்**

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நுண்கலைப் பீட கற்கைநெறி அனுமதிக் கான தகுதிகாண் பரீட்சைக்க விண்ணப்பிப்பதற் கான படிவம் உண்டு.

Bharathy Pathippakam.
430, K. K. S. Road, Jaffna.

### ஆன்மீக நிகழ்வு

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆன்மீக நிகழ்வு வரிசையில் நாளை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.கொட்டடி நமசிவாயவித்தியாலய மாணவர்களின் நிகழ்வு இடம்பெறும். (202-236)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

1062 நீலம்

வெற்றி இலக்கங்கள்

தனுசு

04 11 36 54

10-02-2009

செல்லுபடியாகும் தொடர் இல. 400455554 - 400475599

ஜக்பொட் பரிசு ரூபா. 8,420,350/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 211,053 | 20/- | 4,221,060/- |
| 2 இலக்கங்கள் | 19,349 | 40/- | 773,960/- |
| 1 இல. + லக்கினம் | 19,289 | 60/- | 1,157,340/- |
| 2 இல. + லக்கிலம் | 1,774 | 200/- | 354,800/- |
| 3 இலக்கங்கள் | 526 | 1000/- | 526,000/- |
| 3 இல. + லக்கினம் | 36 | 10,000/- | 360,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,420,350/- | - |
| மொத்தம் | | | 7,993,160/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 252,035 | | 8,493,160/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,891,900/-

தொடர் இலக்கம் 500467232 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 பெப்ரவரி 13 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கொழும்பு | 400472307-2-23 |
| பதுளை | 400460262-5-47 |
| மட்டக்களப்பு | 400469265-7-29 |
| களுத்துறை | 400459473-0-32 |
| கம்பஹா | 400464688-8-08 |


## மாதகல் புனித லூர்து அன்னையின் வருடாந்தத் திருவிழா 2009




மாதகல் கடற்கரையில் அழகுற அமைந்துள்ள புனித லூர்து அன்னையின் வருடாந்தத் திருவிழா இம்மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. 2009.02.14 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு நற்கருணை வழிபாடும் 2009.02.15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம் பெறும்.

பக்தர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கவனத்துக்கு
1. கையடக்கத்தொலைபேசியோ, கைப்பையோ கொண்டுசெல்ல அனுமதிக்கப்படவில்லை.
2. வர்த்தகர்கள் முன் அனுமதியை நிர்வாகத்திடம் பெற்றுக்கொள்ளவும்.

பங்குத்தந்தையும்,பங்கு மக்களும்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

11 ஆம் ஆண்டு



அப்பாப்பிள்ளை
சிதம்பரநாதன்
பிறப்பு:
10★09★1924
இறப்பு:
12★03★1998

முதலாம் ஆண்டு



ஞானேஸ்வரி
சிதம்பரநாதன்
பிறப்பு:
18★11★1937
இறப்பு:
25★01★2008
(திதி: சங்கட சதுர்த்தி)

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அம்மா என்று அழைக்க நீங்கள்
இல்லையே
எங்களுக்காய் வாழ்ந்த அம்மாவே
ஆண்டு ஒன்று சென்றாலும் ஆறவில்லை
எம் துயர்.

கோவில் வீதி, மஞ்சத்தடி,
இணுவில்.

குடும்பத்தினர்.

(A)

## 31 ஆம் நாள் நினைவில்



மண் மகிழ:
01★09★1952

மனம் நெகிழ:
12★01★2009

திருமதி
றீற்றா அன்ரனி

''சீவியத்தில் என்னை நேசித்தவர்களே
மரணத்திலும் என்னை மறவாதீர்கள்''

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக கோப்பாய் தெற்கு புனித மரியன்னை ஆலயத்தில் 12.02.2009 மாலை 5.00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பழைய தபாற்கந்தோர் வீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.

இவரின் பிரிவால் வாடும்
ச.அன்ரனி
(கணவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'மெய்ப்பாட்டியலும் மரபியலும்' நூல் வெளியீடு இன்று

இணுவில், பெப்.12

அளவையூர் பண்டிதர் க.நாகலிங்கத்தின் "மெய்ப்பாட்டியலும் மரபியலும்" என்னும் நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு அளவெட்டி மகாஜன சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் பாராட்டுரையை ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோர் நிகழ்த்துவர்.

நூலின் வெயிளீட்டுரையை பலாலி ஆசிரியர் கலாசாலையின் ஓய்வுபெற்ற அதிபர் கவிஞர் சோ.பத்மநாதன் வழங்குவார். நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் வழங்க துர்க்கா தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் பெற்றுக்கொள்வார்.

ஆய்வுரையை யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர்களான இ.குமரன், பொ.அருந்தாகரன் ஆகியோர் வழங்குவர்.

(201-55)

## அரியாலைப் பிரதேசத்தில் அறுவடை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.12

அரியாலைப் பிரதேசத்தில் பெரும் போக நெற்செய்கை அறுவடை செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

செம்மணி, நாயன்மார்கட்டு, நெடுங்குளம் போன்ற பிரதேச வயல் நிலங்களில் பயிரிடப்பட்ட நெல் அறுவடை செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அதேசமயம் இப்பிரதேசங்களில் தாழ்ந்த பகுதியில் உள்ள வயல்களில் உள்ள நெற்கதிர்கள் இன்னும் காயாததால் அறுவடை செய்யும் பணிகள் சில நாள்கள் தாமதம் ஆகலாம் என்றும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (202-224)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம், பெப்.12

சண்டிலிப்பாய் கல்விக் கோட்டத்தின் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டி இன்றும் நாளையும் பிற்பகல் ஒரு மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

15, 17, 19 வயது அணிகள் பங்குபற்றவுள்ளன. (202)

### வல்வெட்டித்துறை நகர எல்லைக்குள்

## விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் சுத்தமில்லை என விசனம்

கரவெட்டி, பெப்.12

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசத்தில் பொதுமக்கள் மற்றும் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படும் குடிதண்ணீர் சுத்தமாக இல்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வல்வெட்டி வேவிற்பிள்ளையார் கோயிலின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள கிணற்றிலிருந்து பெறப்பட்டு விநியோகிக்கப்படும் குடிதண்ணீரே சுத்தமின்றி இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மேற்படி கிணற்றுக்கு அருகாக வாகனப் போக்குவரத்து அதிகளவில் இடம்பெறும் வீதி உள்ளது. இவ்வீதியால் வாகனங்கள் செல்லும்போது வெளிக்கிளம்பும் புழுதிகள் கிணற்றுக்குள் செல்கின்றன. இந்நிலையில் அயலில் வசிப்போர் இக்கிணற்றிலிருந்து பெறப்படும் நீரை, குடிதண்ணீருக்குப் பயன்படுத்த முடியாதுள்ளது எனத் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அக்கிணற்று நீரையே குடிதண்ணீருக்காக விநியோகிப்பது குறித்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது.(202-70)

### குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## கல்வியியல் கல்லூரிக்கு உப பீடாதிபதிகள் நியமனம்

கோப்பாய், பெப்.12

யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரிக்கு மேலும் மூன்று உப பீடாதிபதிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

திருமதி ஜெ.தியாகலிங்கம், செல்வி நி.நல்லையா, திருமதி செ.சிவபாதம் ஆகிய மூவருமே இவ்வருடம் தொடக்கம் செயற்படும்படியாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (202-72)

## குடாநாட்டில் மீள்குடியேற விரும்பும் முஸ்லிம்களுக்கு உதவி நடவடிக்கை

### சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.12

குடாநாட்டில் மீளக் குடியமர விரும்பும் முஸ்லிம் மக்களை அன்புடன் வரவேற்கின்றேன். அவர்கள் குடியமர்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுப்போம் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

குடாநாட்டில் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒன்றுடன் ஒன்றுகலந்த உறவுகளாகவே வாழ்ந்து வந்திருந்தோம். மிக மோசமான நாசகார செயற்பாடுகளால் இன்று முஸ்லிம் மக்கள் குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த நிலையில் வாழ வேண்டியுள்ளது.

தற்போது குடாநாட்டில் வாழ்ந்து வருகின்ற முஸ்லிம் மக்களது தேவைகள் தொடர்பில் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்கின்றனர். இங்கு மீளக் குடியமர வரும் முஸ்லிம் மக்களை அன்புடன் வரவேற்று, அவர்கள் குடியமர்வதற்கான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளத் தயாராக உள்ளேன் - என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் வசித்துவரும் முஸ்லிம் மக்கள் கடந்த திங்கட்கிழமை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வட மாகாணத்துக்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவா னந்தாவை அவரது யாழ். அலுவலகத்தில் தங்களது தேவைகள் தொடர்பில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ்.குடாநாட்டில் மீளக் குடியமர வரும் மக்களை குடியமர்த்துவதற்காகவும் தற்போது சொந்த இருப்பிடங்களின்றி இங்கு வாழ்ந்துவரும் முஸ்லிம் மக்களுக்கு இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும் ஏற்பாடுகளைச் செய்யவுள்ளேன். இதற்கான காணிகள் தொடர்பான விவரங்கள் அனைத்தையும் பிரதேச செயலாளர் வாரியாக திரட்டி வருகின்றோம். குடாநாட்டில் முஸ்லிம் மக்கள், நல்ல எதிர்கால எதிர்பார்ப்புக்களுடன் நிம்மதியாக வாழும் காலம் உருவாகியுள்ளது. சொர்க்க வாசல் என குடாநாட்டு மக்களால் உணர்த்தப்பட்டுவரும் ஏ-9 தரைப்பாதை திறக்கப்பட்டதும், குடாநாட்டின் தற்போதைய நிலைமை முழுமையாக் மாறிவிடும்- என்றும் தெரிவித்தார். (202)

## திட்டமிடல் செயலமர்வு

வடமராட்சி, பெப்.13

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் சுகாதாரமும் உடற்கல்வியும், வரலாறு ஆகிய பாடங்களைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான இவ்வாண்டுக்குரிய திட்டமிடற்செயலமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுகாதாரமும் உடற்கல்வியும் போதிக்கும் ஆசிரியர்களுக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மண்டபத்திலும் வரலாறு போதிக்கும் ஆசிரியர்களுக்கும் இவ்வித்தியாலத்திலுள்ள ஆசிரிய வளநிலையத்திலும் இச்செயலமர்வுகள் இடம்பெறும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா தெரிவித்துள்ளார். (202-236)

## பழைமையான மின்கடத்திகள்: அபாயத்தில் மக்கள்

வண்ணை, பெப்.12

வண்.வட மேற்கு, நாவலடி ஒழுங்கைப் பகுதிகளில் உள்ள பழைமை வாய்ந்த மின் கடத்திகளால் அபாயகரமான சூழலில் அப்பகுதி மக்கள் வாழ்ந்து வருவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

மேற்படி பகுதிகளில் கடந்த இருபது வருடங்களுக்கு முன்பு பொருத்தப்பட்டுள்ள செப்புக் கம்பிகளினாலேயே மின் விநியோகம் நடைபெற்று வருகின்றது.

இப்பகுதி மக்களால் மின்சார விநியோகப் பகுதியினருக்கு பலதடவை முறைப்பாடுகள் செய்யப்பட்டன. எனினும் இது வரை எந்த வித நடவடிக்கைகளும் எடுக்கபடவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றன. (202-160)

## வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு கூரைச் சீற்றுக்கள்

யாழ்ப்பாணம், பெப்.12

கோப்பாய்ப் பிரதேச செயலாளர் பிரிவில் வீட்டுத் திட்டப் பயனாளிகளுக்கு கூரைச் சீற்றுக்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்தக் கூரைச் சீற்றுக்கள் கடந்த திங்கட்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றன.

வீட்டுத்திட்டப் பயனாளி ஒருவருக்கு முப்பது கூரைச் சீற்றுக்கள் வழங்கப்பட்டன.

தற்போது சிமெந்து பைக்கற்றுக்கள் கப்பல் மூலம் வந்து சேர்ந்துள்ளதை அடுத்து வீட்டுத்திட்டப் பயனாளிகள் தமது வீடுகளை முழுமையாக நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (202-224)

## விவசாய உதவி

வண்ணை, பெப்.12

கரித்தாஸ்- கியூடெக் நிறுவனம் உலக உணவு விவசாய நிறுவனத்துடன் இணைந்து நல்லூர் மற்றும் உரும்பிராய், புத்தூர் விவசாய போதனாசிரியர் பிரிவுகளிலுள்ள விவசாயிகளுக்கு மரக்கறி விதைகள், சிறுதானியங்கள் மற்றும் விவசாய உபகரணங்கள் பசளை வகைகள் என்பனவற்றை வழங்கி உள்ளது.

'நிஷா' புயல் மற்றும் வெள்ள அனர்த்தங்களுக்குப் பின்னால் உடனடியாக செயற்படுத்தப்பட்ட இவ்வேலைத்திட்டத்தில் மேற்படி இடங்களில் இருந்து 420 விவசாயக் குடும்பங்கள் பயனடைந்துள்ளன.

மேலும் விவசாயிகளுக்குப் பயிற்சி வகுப்புக்களும் விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-160)




யாழ்.மாவட்டத்துக்கான அவசர மருத்துவ சேவையின் அங்குரார்ப்பண வைபவம் நேற்றுப் பண்ணையில் அமைந்துள்ள சுகாதாரக் கிராமத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அமெரிக்கப் பிரதித் தூதுவர் ஜேம்ஸ் ஆர்.மூர், சர்வதேச மருத்துவக் குழுவின் இலங்கைக்கான பணிப்பாளர் டொன்னி ஆட்யாட், உலக சுகாதார நிறுவனத்தின் பிரதிநிதி டாக்டர் என்.சிவராஜா, சர்வதேச மருத்துவக் குழுவின் டாக்டர் றோஷ், யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் அமர்ந்திருப்பதை முதல் படத்திலும், யாழ்.அரச அதிபர், மாகாண சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்துள்ள இருபடங்களிலும் காணலாம்.

இந்த வைபவத்தில் கலந்து கொண்ட வைத்திய அதிகாரிகள், ரெலிக்கொம் நிறுவனப் பிராந்திய முகாமையாளர் சிவானந்தன் மற்றும் சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்கள் அமர்ந்திருப்பதை நான்காவது படத்திலும், பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் அமைக்கப்பட்ட அவசர அழைப்பு நிலையத்தை அமெரிக்க பிரதித்தூதுவர் ஜேம்ஸ் ஆர்.மூர் திறந்து வைப்பதை ஐந்தாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: ஹரிகரன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் விழாவின்போது எடுக்கப்பட்ட படங்கள். கல்லூரி நடத்திய போட்டிப் பரீட்சையின் போது சித்தியடைந்த மாணவி ஒருவருக்கு சுவாமி சித்ரூபானந்தா சான்றிதழ் வழங்குவதை முதலாவது படத்திலும் மாணவிகளின் இசை நிகழ்வை இரண்டாவது படத்திலும் காணலாம்.
(படங்கள்: கர்ணன்)

# பயங்கரவாதத்தை ஒழிக்க ஜனாதிபதி எடுத்த முயற்சியை அமெ. பிரிட்டன் பாராட்டுகின்றன

## அமைச்சர் டலஸ் அழகப்பெரும பெருமிதம்

கொழும்பு, பெப்.12

''உலக பயங்கரவாதத்தை, அதாவது பின்லேடனை ஒழிக்கப் பிரிட்டனும் அமெரிக்காவும் பல முயற்சிகளை மேற்கொண்டன. பலன் கிடைக்கவில்லை. இன்று பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டுவரும் எமது ஜனாதிபதியை அமெரிக்காவும், பிரிட்டனும் பாராட்டி வருகின்றன.''

-இவ்வாறு கூறினார் போக்குவரத்து அமைச்சர் டலஸ் அழகப்பெரும.

மத்திய மற்றும் வடமத்திய மாகாண சபை தேர்தல்கள் தொடர்பிலான மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாடு நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்றது.

அங்கு உரையாற்றும் போதே டலஸ் அழகப்பெரும இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

''ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட முக்கிய 6 கூட்டங்கள் முடிவடைந்துள்ளன. அத்துடன் 16 முக்கிய பிரசார பேரணிகளும் நடத்தப்பட்டுள்ளன. கட்சித் தலைவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொண்ட முக்கிய பிரச்சார கூட்டங்களில் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டதைக் காணக்கூடியதாக இருந்தது.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்ரமசிங்க எம் மீது பல குற்றச்சாட்டுக்களை முன்வைக்கிறார். பயங்கரவாதத்திலிருந்து எமது நாட்டை மீட்க ஜனாதிபதி பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். கடந்த காலங்களில் இலங்கையை ஆட்சி செய்த ஜே. ஆர். ஜெயவர்தன, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க, சந்திரிக்கா போன்றவர்களால் விடுதலைப்புலிகளை ஒழிக்க முடியவில்லை. ஆனால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் அதை செய்ய முடிந்தது.

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் டோனி பிளேயர் பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டார். ஆனால் அவரால் முடியவில்லை. பிரதமர் பதவியை விட்டு அவர் வீட்டுக்குத்தான் செல்ல நேரிட்டது. தம்மால் முடியாமல் போனதை அவரே ஒப்புக்கொண்டார். அதேபோல் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ் மற்றும் மார்க்கெய்ன் ஆகியோருக்கும் இதே நிலைமைதான் ஏற்பட்டது.

உலக பயங்கரவாதத்தை, அதாவது பின்லேடனை ஒழிக்கப் பிரிட்டனும் அமெரிக்காவும் பல முயற்சிகளை மேற்கொண்டன. பலன் கிடைக்கவில்லை. இன்று பயங்கரவாதத்தை ஒழிக்க நடவடிக்கை மேற்கொண்டுவரும் எமது ஜானாதிபதியை அமெரிக்காவும், பிரிட்டனும் பாராட்டி வருகின்றன''- என்றார். (சி)

### கால்நடை உணவு விற்பனை நிலையம்

தென்மராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கத்தின் கால்நடை உணவு விற்பனை நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் தினத்தன்று சங்கத்தானையில் திறக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தினை சங்கத் தலைவர் த.சிதம்பரப்பிள்ளை திறந்து வைத்தார்.

ஏற்கனவே சாவகச்சேரி கால்நடை வைத்தியர் பணிமனைக் கட்டடத்தில் சங்கத்தின் விற்பனை நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (202-207)

### முச்சக்கர வண்டி அன்பளிப்பு

தென்மராட்சி லயன்ஸ் கழகத்தினர் சிறுவயதில் இளம்பிள்ளை வாத (போலியோ) நோயினால் பாதிக்கப்பட்ட 17 வயது இளம் தாய் ஒருவருக்கு முச்சக்கர வண்டியை வழங்கியுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.யில் நடைபெற்ற கழகத்தின் நிகழ்வில் வரணி வடக்கைச் சேர்ந்த திருமதி றொபின்சன் பவீந்தினி என்பவருக்கே முச்சக்கர வண்டி வழங்கப்பட்டது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட சர்வதேச லயன்ஸ் கழக 306 பி1 மாவட்டத்தின் வடக்கு மாவட்ட பிரதிச் செயலாளர் லயன் எஸ்.சிவராஜேஸ்வரன் முச்சக்கர வண்டியினைப் பெண்ணிடம் கையளித்தார் என கழகச் செயலாளர் [illegible] தெரிவித்தார். (202-207)


## கண்ணீர் காணிக்கை!

எமது நிறுவன விஞ்ஞானத்துறை ஆசிரியர் திரு.M.பிரியந்தன் அவர்களின் சகோதரன்

### முத்தையா ஆனந்ததீர்த்தன்



அகால மரணமான செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றுள்ளோம். ஆறாத் துயரில் உள்ள எமது ஆசிரியரினதும், குடும்பத்தினரினதும் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

இயக்குநர், ஆசிரியர்கள், மாணவர்கள், சயன்ஸ் அக்கடமி, நல்லூர், அரியாலை

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தர் சொக்கலிங்கம்

தோற்றம்: 15.05.1937

மறைவு: 25.02.2005

திதி: திருதியை

அன்பால் வழிநடத்தி அறிவூட்டியே
நின்பால் உறவுகளைத் துயரிலாழ்த்திப்
பொன்போல் நான்காண்டுகள் சென்றாலும்
எம் குடும்பத் துயரமின்னும் ஆறவில்லை.

எம் குடும்பத்தின் குலவிளக்கு எம் தந்தையின்
ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்.

நி.மு: மாகியம்பதி, சண்டிலிப்பாய்.
த.மு: மரகதவீலா,
மெமோறியல் வீதி, மானிப்பாய். (82527)

துயருறும்: மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

பிறப்பு 18 . 05 . 1935



இறப்பு 14 . 01 . 2009

### அமரர் கணபதிப்பிள்ளை தம்பிராசா

ஐயா என்று நாங்கள் அழைக்க
அருகில் இன்று நீங்கள் இல்லையோ!
இதயம் குமுறும் 31 ஆம் நாளில்
ஏக்கத்துடன் நாம் இறைஞ்சுகின்றோம்
அன்று போல் இன்றும் நீங்கள்
நல்வழி காட்டுவீர்கள் என்ற நம்பிக்கையுண்டு
திரும்பும் இடமெல்லாம் உங்கள்
அன்பு முகம் தெரியுதையா!
திரும்பவும் ஒரு பிறப்புண்டேல்
எம்மிடம் வந்துவிடுங்கோ ஐயா!

கடந்த 14.01.2009 புதன்கிழமை இறைபதம் அடைந்த எமது குடும்ப விளக்கின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை [13.02.2009] வெள்ளிக்கிழமை காலை 7 மணியளவில் இன்பர்சிட்டி மடத்தில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: அழைப்புக் கிடைக்காதவர்கள் இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இன்பர்சிட்டி,
பருத்தித்துறை. (82618) குடும்பத்தினர்.

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்: 21.04.1940

மறைவு: 05.02.2007

சித்த வைத்திய கலாநிதி

### வேலாயுதம்பிள்ளை குகமூர்த்தி அவர்கள்

திதி: அபரபக்கத் திருதியை (12.02.2009)

வளம்பல கொழித்த மாமலை சரிந்ததோ?
விளங்கிய பொன்தேர் தீயில் எரிந்ததோ?
ஆருயிர் அப்பா! அருந்தவத் தந்தையே
யாரிடம் போவோம்? யாரிடம் ஆறுவோம்.

கந்தையா வளவு,
259, [illegible] வீதி,
யாழ்ப்பாணம். குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளை எட்டி யாழ். கல்வித்துறைக்கு புகழ் சேர்த்த மாணவர்கள்!

அண்மையில் வெளியாகிய ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முடிவுகளில் சிறப்பான பெறுபேற்றினை அடைந்து, யாழ்.மாவட்டத்துக்கும், கல்வித்துறைக்கும் பெருமை சேர்த்த மாணவர்களின் எண்ணங்களை உதயன் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றான். அதன் ஒரு பகுதி இங்கு பிரசுரமாகின்றது.



## கனகநாயகம் பிரசாந்தன்
### 3ஏ (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

தமிழ், அளவையியல், நாடகமும் அரங்கியலும் போன்ற பாடங்களைத் தெரிவுசெய்தேன்.

கல்லூரியில் உதைபந்தாட்டம், கிரிக்கெட் போன்ற துறைகளில் அதிகம் ஈடுபட்டேன். அனைத்துத் துறைகளிலும் எனது பங்களிப்பு கல்லூரியில் அதிகமாக இருந்தது. இத்தகைய துறைகளில் ஈடுபட்டாலும் அவை எனக்குத் தடையாக அமையவில்லை. அவை மென்மேலும் எனக்கு உற்சாகத்தையே தந்தது.

எமது கல்லூரியின் அதிபர், ஆசிரியர்கள் சிறப்பான முறையில் வழிநடத்தினார்கள். விளையாட்டுத்துறை சார்ந்த நேரங்களைத் தவிர முழுமையான நேரமும் கல்வியில்தான் அதிக ஈடுபாடு கொண்டிருந்தேன்.

நான் எனது நண்பன் ஒருவனுடன் சேர்ந்துதான் படிப்பது. அதனால் இருவருக்கிடையே ஏற்படுகின்ற சந்தேகங்களை எமது பாட ஆசிரியர்களிடத்தில் போய் கேட்டுத் தெளிவடைவோம்.

சாதாரண தரப் பரீட்சையில் எனது எதிர்பார்ப்புக்கு எட்டிய பெறுபேறுகள் கிடைக்கவில்லை. அதனால் உயர்தரப் பரீட்சையில் இந்த இலக்கினை அடையவேண்டும் என்ற வைராக்கியத்துடன் படித்தேன்.

## செல்வச்சந்திரன் ஸ்ரீநிஷாந்
### பெறுபேறு: 3ஏ (உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி)



நான் தரம் 1முதல் தரம் 5 வரை யா/கரணவாய் தாமோதரா வித்தியாசாலையில் கல்வி கற்றுப் பின்னர் தரம் 6முதல் 13 வரை யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியில் கற்றேன். எனது கல்விக்கு எனது பெற்றோரும் என் இரண்டு சகோதரர்களும் அடித்தளமாக நின்று உதவி புரிந்தனர். நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தேன். ஆனால் எனக்கு க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் 2ஏ5பி3சி என்ற பெறுபேறே கிடைத்தது. இதனால் உயர்தரப் பரீட்சையில் நான் சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும் என்ற ஆதங்கம் எனக்குள் இருந்தது. அதன்படி எனது உயர்தர கல்விக்கு எமது பாடசாலையின் ஆசிரியர்கள் என்னை மென்மேலும் ஊக்கமளிப்புச் செய்வித்தனர். எனது கல்விக்கு உதவி புரிந்த ஆசிரியர்களான ஆ.பிரபானந்தன், ப.ஜோதீஸ்வரன் , சு.முரளிதரன், கி.நடராசா ஆகியோருக்கு எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றும் எமது பாடசாலை அதிபர், ஏனைய ஆசிரியர்கள், தனியார் கல்வி நிறுவன நிர்வாகிகள், ஆசிரியர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களுக்கும், என் அயலவர்களுக்கும், எனது நண்பர்களுக்கும், உறவினர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இவர்களால் தான் நான் அளவையியலும் விஞ்ஞானமுறையும், இந்துநாகரிகம், தமிழ் ஆகிய மூன்று பாடங்களிலும் 3ஏ எனும் பெறுபேற்றைப் பெற முடிந்தது. நாடகமும் அரங்கியலும் ஆசிரியர் எனக்குக் கற்பிக்காவிட்டாலும் எனக்கு அளித்த அறிவுரைகள் குறிப்பிடத்தக்கன.



## கர்யனா சுந்தரலிங்கம்
### பெறுபேறு: ஏ2பி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)

பரீட்சைக்குத் தோற்றும்போது இரவு நேரங்களில் ஏற்படும் மின் தடை, கோயில்களில் போடும் ஒலிபெருக்கிச் சத்தம் என்பவற்றினால் சிக்கல் ஏற்பட்டாலும் இவற்றினை எதிர்கொண்டு விடாமுயற்சியாலும், தன்னம்பிக்கையுடனும் படித்துச் சிறந்த பெறுபேற்றை அடைந்தேன்.

நூலகங்களை பயன்படுத்தியமையும் அன்றாட பாடங்களை அன்றன்று படித்தமையாலும் அத்துடன் பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளை தவிர்த்து, நேரத்தினை விரயமாக்காமல் பயன்படுத்தியமையாலும் நான் என்னுடைய இலக்கினை அடைய முடிந்தது.

நான் கணித பாடத்தினை தெரிவுசெய்ததற்கு சாதாரண தரம் படிக்கும்போது பாடசாலையில் கற்பித்த கணித ஆசிரியையும், தனியார் கல்வி நிலையங்களில் கணித பாடத்தினைக் கற்பித்த ஆசிரியர்களும், எதிர்காலத்தில் பொறியியலாளராக வரவேண்டும் என்ற விருப்பமும் காரணமாகும்.

பெறுபேற்றினை அடைந்தபோது சந்தோஷமாக இருந்தது. அப்பா, அம்மா, கல்வி கற்பித்த ஆசிரியர்கள் குறிப்பாக பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்கள் என்பவர்கள் என் வெற்றிக்குக் காரணமாக இருந்தார்கள்.

எதிர்காலத்தில் இலத்திரனியல் பொறியியலாளராக வந்து நாட்டிற்கு சேவை செய்யவேண்டும் என்பது என இலக்காகும்.

ஆரம்பக்கல்வியினை நான் யா/வயாவிளான் மத்திய மகாவித்தியாலய ஆரம்ப பாடசாலையில் கற்றேன்.

நான் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்ததும் வேம்படி மகளிர் கல்லூரியில் இணைய விரும்பினேன். ஆனால் பரீட்சை அனுமதிக் காலத்தில் எனக்குத் திடீர் சுகயீனம் ஏற்பட்டதால் அது நிறைவேறவில்லை. இது என் மனதில் நெடு நாளைய ஆதங்கமாக இருந்தது. எனினும் அந்த ஆதங்கம் உயர்தரப் பெறுபேறோடு மறைந்துவிட்டது.

இத்தருணத்தில் எனது வெற்றிக்கு முக்கிய பங்காற்றிய அப்பா, அம்மா, பாடசாலை ஆசிரியர்கள், கல்வி கற்பித்த ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

**சந்திப்பும், படங்களும்: ஔண்யன், நேசன், கணேசமூர்த்தி, பொன்னுத்துரை. 16**

## மதூறிகா வாசுதேவன்
### பெறுபேறு: 2ஏபி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி)



நம்பிக்கையும், விடாமுயற்சியும் இருந்தால் நாம் சிறந்த பெறுபேற்றினைப் பெறமுடியும். எனது ஆரம்பக்கல்வியை யா/கோண்டாவில் றோமன் கத்தோலிக்கத் தமிழ்க் கலவன் பாடசாலையில் கற்றேன்.

பெண்கள் பாடசாலையில் எமது பண்பாட்டை வளர்க்கக்கூடிய சூழலில் நான் கல்வி பெறவேண்டும் என்பது எனது பெற்றோரின் விருப்பம். ஆனால் யா/இந்து மகளிர் கல்லூரியில் இடைநிலை, உயர்தரக் கல்வியைக் கற்பதற்குப் பெற்றோர்கள் வழிகாட்டினார்கள்.

சிறுவயதில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெறமுடியாமல் போனதால் எப்படியும் பல்கலைக்கழக அனுமதி பெற்றுவிடவேண்டும் என்பது எனது ஒரே இலட்சியமாக இருந்தது. இதனால் நான் கலைத்துறையைத் தெரிவுசெய்தேன். தமிழ், இந்துசமயம், பொருளியல் ஆகிய பாடங்களை உயர்தர வகுப்பில் எனது விருப்பப் பாடங்களாகத் தெரிந்தெடுத்தேன்.

நான் விரும்பிய பாடங்களைத் தெரிந்தெடுத்தமையால் என்னால் சுலபமாகப் படிக்க முடிந்தது. நான் சிறப்பான பெறுபேற்றை பெறுவதற்காக அடிக்கடி நூல் நிலையங்களுக்குச் சென்று பாடங்களுடன் தொடர்புபட்ட நூல்களைக் கற்பதுமுண்டு. கடந்தகால வினாக்கள் அனைத்திற்கும் அடிக்கடி விடைகள் தயாரித்து ஆசிரியர்களிடம் காட்டி திருத்தங்கள் மேற்கொண்டுள்ளேன். என்னுடைய வெற்றிக்கு இவைதான் முழுக் காரணம் என நம்புகின்றேன்.

எனக்கு வழிகாட்டிய அதிபர், ஆசிரியர்களுக்கும் நன்றி கூறுகின்றேன். நான் கற்பதற்கு எனது பெற்றோர்களும் முழு ஊக்கத்தையும் தந்தனர்.

எதிர்காலத்தில் மாணவர்களுக்கு வழிகாட்டக்கூடிய ஆசிரியராக நானும் வரவேண்டும் என்பது எனது விருப்பமாகும்.



## யோகேந்திரம் நிரோஜனா
### பெறுபேறு: 3ஏ (உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி)

நான் தரம் 1-11 வரை கம்பர்மலை வித்தியாலயத்திலேயே கல்வியைக் கற்றேன். அங்குள்ள ஆசிரியர்கள் என்னை மிகவும் உற்சாகத்துடனேயே கல்வியைக் கற்கவைத்தனர். இதன் பேறாக நான் சாதாரண தரப் பரீட்சையில் நற்பெறுபேறுகளைப் பெற்று உயர்தரத்திற்காக உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியைத் தெரிவு செய்து கலைப்பிரிவில் கல்வியைக் கற்றேன்.

உயர்தரத்தில் தமிழ், இந்துநாகரிகம், அளவையியல் என்ற மூன்று பாடங்களையும் தெரிவு செய்து ஊக்கத்துடன் கற்றேன். எனது அப்பா வேலை செய்வதில்லை. எனது அண்ணாவும், அம்மாவுமே என்னைப் படிக்க வைத்தார்கள். எனது அப்பா எனக்குத் தேவையான சகல வசதிகளையும் செய்துதந்தார். எங்கள் வீட்டில் மொத்தம் 7 பிள்ளைகள். அவர்களில் 5ஆவது பிள்ளையாகிய நான் மட்டுமே உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளேன். இதனால் என் பெற்றோரின் மகிழ்ச்சியை அளவிட்டுக்கூற முடியாது. நான் மேசை விளக்கிலேயே கல்வியைக் கற்றேன்.

இதுதவிர பாடசாலை பாட ஆசிரியர்களான சு.முரளிதரன், ப.ஜோதீஸ்வரன், பா.பிரபானந்தன் ஆகியோரும் எமக்கு ஊக்கம் தந்தனர். பாடங்களைப் எப்படிப் படிப்பது என்ற முறைகளையும் சொல்லித்தந்தனர்.

இதுதவிர பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் தந்த ஊக்கமும், அறிவுரைகளும் அளவிடற்கரியது. தனியார் நிறுவனமும் என் முன்னேற்றத்தில் கணிசமான பங்கு வகித்தது. இதுதவிர உறவினர்கள், நண்பர்களுக்கும் என நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பெறுபேற்றை அடைந்தது எனக்கு மட்டில்லாத மகிழ்ச்சியைத் தருகிறது.



## றொ-ஆன் றொசாறியா
### 3ஏ (மானிப்பாய் மகளிர் கல்லூரி)

தமிழ், கிறிஸ்தவம், புவியியல் ஆகிய பாடங்களில் 'ஏ' சித்தி பெற்றமை மகிழ்ச்சியளிக்கின்றது. அத்தோடு பல்கலை சென்று அங்கும் சிறப்பான பெறுபேறுகளைப் பெறவேண்டும் எனும் ஆர்வத்தையும் இப்பெறுபேறானது பெற் றுத் தந்துள்ளது. இப்பெறுபேற்றின் மூலம் எனது பாடசாலைக்குப் பெருமை சேர்ந்தமையயிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

உயர்தரம் என்பது ஒரு போட்டிப் பரீட்சை. இதில் பல மாணவர்களோடு போட்டி போட்டுப் படிப்பதனால் புத்தக அறிவோடு நின்றுவிடக்கூடாது. இதனால் எதிர்பார்த்த வெற்றியை அடைய முடியாமல் போய்விடும். மேலதிக குறிப்புகளையும் சேகரித்துக் கற்பது அவசியமானது. மானிப்பாய் பொது நூலகம் எனக்குச் சிறந்த வாய்ப்பாக அமைந்தது. எனது அறிவை பரந்துபட்ட நிலைக்கு இட்டுச்செல்ல நூலக வாசிப்பு உதவியது. இவற்றை என்னால் செய்யக்கூடியதாக இருந்தமையால் இலகுவில் வெற்றிபெறமுடிந்தது. அத்தோடு இரவில் கண்விழித்துப் படிக்க வேண்டும் என்ற கட்டாயத்தை நான் பின்பற்றவில்லை. ஏனெனில் ஒவ்வொருவருடைய உடல் நிலையைப் பொறுத்தது. என்னைப் பொறுத்தவரை இயன்றளவு இரவில் படிப்பதைக் குறைத்துப் பகலில் நேரத்தை வீணடிக்காமல் படிப்பதற்காகப் பயன்படுத்துவேன். இரவில் மின்சாரம் துண்டிக்கப்பட்டதுடன் படிப்பையும் நிறுத்தும் பழக்கம் என்னிடமில்லை. படிக்கவேண்டும் என நினைத்தால் விளக்கின் உதவியுடனும் படிக்கமுடியும். இப்பழக்கம் என்னிடமிருந்தமையால் நினைத்த பெறுபேற்றை எய்தமுடிந்தது. அத்தோடு உயர் பாடசாலைகளில்தான் படிக்கவேண்டும் என்றல்ல. தான் சாதிக்கவேண்டும், என்னாலும் முடியும் என்ற வைராக்கியத்துடன் படிக்கும் ஒரு பிள்ளைக்கு எங்கு படிப்பதென்பது முக்கியமான தொன்றல்ல. அப்பிள்ளை எங்கு படித்தாலும் தனது இலக்கை அடைந்தே தீரும் என்பது எனது மனக்கருத்தாகும். இம்மனநிலையோடுதான் படித்தேன். இவற்றை விட சுயமுயற்சி, விடாமுயற்சி, தொடர்பயிற்சிகள், சந்தேகங்களை உடன் தீர்த்தல் என்பன எனது வெற்றிக்குப் படிக்கல்லாய் அமைந்தன. விளங்கிப் படித்தலை மையமாகக் கொண்டிருந்தமையால் பரீட்சை நேரத்தில் தகுந்த பதிலை என்னால் அளிக்கமுடிந்தது.

எனது இப்பெறுபேற்றிற்கு எனது பெற்றோரது சிறப்பான அறிவுரைகளும் சரியான வழிநடத்தல்களும் உதவி புரிந்தன. அதுமட்டுமல்லாது எனது பாடசாலை அதிபர் திருமதி ஜெயவீரசிங்கம் அவர்களதும், என்னை வழிநடத்திய ஆசிரியர்களதும் அயராத ஒத்துழைப்பும், அர்ப்பணிப்புகளும் என்னை இந்நிலைக்கு உயர்த்தியது. இவற்றோடு தனியார் கல்வி நிறுவனமும் எனக்கு உதவி புரிந்தது.

நல்ல வழிகாட்டியின் உதவியோடு பாடத் தெரிவுகளை மேற்கொண்டு உடனுக்குடன் படிப்பதை பழக்கமாக்கிக்கொள்ள வேண்டும். சந்தேகங்களை உடன் தீர்க்கவேண்டும். சோர்வு நிலையை தவிரக்கவேண்டும். இடைவிடாத வாசிப்புப் பழக்கத்தை கொண்டிருத்தல்வேண்டும். அத்தோடு விளங்கிப் படித்தலை கவனத்தில் கொள்ளும்போது எவ்வளவுதான் கடினமான வினாத்தாளாக இருந்தாலும் எம்மால் அதனை எதிர்கொள்ளமுடியும். இவற்றைவிட மேலாக இறைவனையும் ஒருபோதும் மறவாமல் அவருக்காகவும் ஒரு சிறு நேரத்தையாயினும் ஒதுக்கிச் செயற்படும் போது அவரது உதவி எமக்குக் கிடைக்கும். இதனால் நாம் எதிர்பார்த்த இலக்கை இலகுவில் அடைய முடியும் என்பது எனது கருத்தாகும்.

## பிருந்தா சுந்தரலிங்கம்
### பெறுபேறு: 2ஏபி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)



நான் எனது ஆரம்பக்கல்வியை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் தரம்1 தொடக்கம் 10 வரை கல்வி கற்று வந்தேன். பின்னர் எனது தாயாரின் இறப்புக் காரணமாக யாழ்ப்பாணம் வந்து பெரியப்பா வீட்டில் இருந்து யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் தரம் 11 தொடக்கம் A/L வரை உயர்கல்வியைக் கற்றேன். நான் உயர்தரத்தில் தமிழ், இந்துநாகரிகம், புவியியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்தேன்.

சிறுவயதில் இருந்து கலையில் எனக்கு ஆர்வம் உள்ளது. தரம் 10இல் தாயார் இறந்தமையினால் க.பொ.த. சாதாரண தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறமுடியவில்லை. இதன் காரணமாக க.பொ.த. உயர்தரத்தில் சிறந்த பெறுபேற்றைப் பெறவேண்டும் என ஆர்வத்துடனும், ஊக்கத்துடனும் கற்றேன். எனது இக்கல்விக்கு அதிபர், ஆசிரியர்கள், நண்பர்கள், உறவினர்கள் போன்றோரின் ஊக்கத்தினாலும், இப்பெறுபேற்றை எடுக்கமுடிந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக எனது உயர்கல்வியைக் கற்பதற்கு அண்ணா, பெரியப்பா, பெரியம்மா ஆகியோரின் ஒத்துழைப்பினாலும் இப்பெறுபேற்றைப் பெற்று மகிழ்ச்சியடைந்தேன்.

எல்லாம்வல்ல இறைவனின் ஆசீர்வாதத்தாலும், நான் விரும்பும் சாயிபாபாவினாலும் இப்பெறுபேற்றைப் பெற்றேன் என நம்புகின்றேன்.

எதிர்காலத்தில் ஆசிரியராகப் பணிபுரிந்து சேவையாற்ற வேண்டும் என்பதே எனது இலட்சியம்.



## சசிகலா இராசதுரை
### பெறுபேறு: 2ஏபி (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்)

நான் ஒரு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்தவள். நான் எனது ஆரம்பக்கல்வியை யா/அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் கற்றேன். பின்னர் தரம் 10 இலிருந்து உயர்தரம் வரை யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் கற்றேன்.

நான் உயர்தரத்தில் புவியியல், தமிழ், சங்கீதம் ஆகிய பாடங்களைத் தெரிவுசெய்து கற்றேன். நான் உயர்தரக் கல்வியை கற்பதற்கு ஆசிரியர்கள் மிக்க ஆர்வம் காட்டினார்கள். எங்களுக்கு ஆசிரியர்கள் பாடசாலை முடிந்தபின்பும் பல்வேறு சிரமங்களின் மத்தியில் நின்று கல்வி கற்பிப்பார்கள். இவ்வாறு கற்பித்த ஆசிரியர்களுக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன். இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது குடும்பத்தினரும் மிக்க ஒத்துழைப்பு அளித்தார்கள். இடைநிலைக் கல்வியைக் கற்று நான் உயர்தரத்தில் இப்பெறுபேற்றைப் பெற இன்னுமொரு காரணம் நான் இடம்பெயர்ந்து வந்திருந்தபோது [சயன்ஸ் அக்கடமி] தனியார் கல்வி நிறுவனத்தில் இலவசமாகப் படிப்பித்தார்கள். அதிலிருந்து எனக்குக் கல்வியில் மிக்க ஆர்வம் ஏற்பட்டது. உயர்தரத்தில் இப்பெறுபேற்றைப் பெறுவதற்கு எனது பாடசாலையும் குடும்பத்தினரும் ஊக்கம் கொடுத்தார்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமை அடைகிறேன். எனது இலட்சியம் ஒரு விரிவுரையாளராக வரவேண்டும் என்பதே ஆகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





தரம் - 05 மாணவர்களுக்கான

## தயாரப்படுத்தல் பரீட்சைத் தொடர் – 2009


வினாத்தாள் - 1 நேரம் : 45 நிமிடங்கள்

* படங்களை நன்கு அவதானித்து வித்தியாசமான உருவைக் கொண்ட கட்டத்தின் கீழ்க்கோடிடுக.

01. 1) 2) 3)



02. 1) 2) 3)



* பின்வரும் வசனம் உணர்த்தும் தனிச்சொல்லின் கீழ்க்கோடிடுக.

03. மிகப் பழைமை வாய்ந்த பொருட்களை சேமித்து பாதுகாக்கும் இடம்,
1) துறைமுகம். 2) களஞ்சியம். 3)நூலகம். 4) நூதனசாலை.

04. மனைவியை இழந்த கணவன்,
1) விதவை. 2) சுமங்கலி. 3) தபுதாரன். 4) பிரமச்சாரி.

* பொருத்தமற்ற சொல் இடம்பெற்றுள்ள விடையின் கீழ்க்கோடிடுக.

05. 1) லீக்ஸ், கோவா, கரட், சலாது.
2) இந்தியா, இலங்கை, செக்குடியரசு, சீனா.
3) கால்பந்து, கரப்பந்து, பெருவிளையாட்டு, வலைப்பந்து.

06. 1) விவசாயி, நெசவாளி, ஓடாவி, தச்சன்.
2) பீட்றூட், மரவள்ளி, பீர்க்கு, மரக்கறி.
3) உதயம், மாலை, மதியம், இரவு.

* தொடர்பை அவதானித்து மிகச்சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

07. கத்தரிக்கோல் - துணி,
1) கல் - திரிகை. 2) கத்தி - மாம்பழம்.
3) கோடரி - மரம். 4) துப்பாக்கி - வேட்டை.

08. காற்றாடி - பறவை எனின், நீர்மூழ்கி,
1) நூல். 2) கடல். 3) பாம்பு. 4) மீன்.

* மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

09. ஆசியா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, பசுபிக், ஐரோப்பா என்பன ஏதோ ஒரு வகையில்,
1) ஒத்தவை. 2) ஒவ்வாதவை. 3) ஒன்று மட்டும் வித்தியாசமானது.

10. விகடகவி, கனகமணி, இனியரதி, மகுடபதி ஆகிய சொற்களுக்குள்ளே ஒரு சொல்லில் உள்ள ஓர் எழுத்தாயினும் மற்றச் சொற்களில் காணப்படவில்லை. இந்தச் சொல்லின் இரண்டாம் எழுத்தை எழுதுக.
1) 2) தி 3) னி 4) ப

* பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.

11. ஒரு மரத்திற்கு எப்போதும் இருப்பது,
1) இலைகள். 2) காய்கள். 3) பூக்கள்.
4) வேர்கள்.

12. ஒரு தகப்பனுக்கு எப்போதும் இருப்பது,
1) நிலம். 2) பணம். 3) மக்கள்.
4) மனைவி

* கோடிடப்பட்ட சொற்களுக்கு மிகப் பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.

13. தொழிலாளர்கள் அல்லும் பகலும் அயராது உழைத்து முன்னேறினர்.
1) விடாமுயற்சியாக. 2) எந்நேரமும். 3) ஒட்டமும் நடையுமாக.

14. யுத்தத்தினால் தனது ஒரே மகனை இழந்த தாய் கண்ணீரும் கம்பலையுமாக காணப்பட்டாள்.
1) மிகுந்த துயரம். 2) மிகுந்த மகிழ்ச்சி. 3) எல்லையற்ற அறிவு.

**மாணவர்களே! கடுமையான தொடர் பரீட்சைகளுக்குப் பயிற்சிபெறத் தயாராகுங்கள்!!**
**"பயிற்சி உயர்ச்சி தரும்"**

* பின்வரும் பாடலை வாசித்து அதில் கூறப்படாத கருத்தைத் தெரிந்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

வேலை செய்வோர் கூடினரென்று
சோம்பேறிகள் இல்லை யாரும்
பொய் சொல்வோருமில்லை
மனிதர் போன்று
நேர்மையாட்சியுளது அங்கு.


1) தேனீக்கள் பொய் வேலை செய்யமாட்டா.
2) மனிதர்கள் பொய் சொல்லமாட்டார்கள்.
3) வேலை செய்வோர் ஒன்று கூடி வேலை செய்வர்.
4) எல்லோரும் சேர்ந்து வேலை செய்வர்.

15. ..............................................................................................

16. ..............................................................................................

* தரப்படும் கோலத்தை அவதானித்து விடையளிக்குக.


17.





18.

| | | | |
|---|---|---|---|
| 0.4 | 0.6 | 0.8 | ........ |

* அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்குக.

19. 
இவ்வுருவில் உள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 5
3) 7 4) 9

20. இங்கு எத்தனை செங்கோணங்கள் பெறலாம்,
1) 4 2) 5
3) 7 4) 8



* மிகச் சரியான விடையின் கீழ்க்கோடிடுக.

21. மார்கழி மாதம் மழை அதிகம். மழை அதிகமான மாதங்களில் குளிர் அதிகம். ஆகவே, மார்கழியில் குளிர் அதிகம். ஆகவே, மார்கழியில் குளிர் அதிகம் என்பது,
1) சரி. 2) பிழை. 3) கூறமுடியாது.

22. அன்னம் ஒரு பறவை. அது வெள்ளை நிறமுடையது. எனவே, பறவைகளெல்லாம் வெள்ளை நிறமுடையன,
1) சரி. 2) பிழை. 3) கூறமுடியாது.

23. நாளை புதன்கிழமை எனின், நேற்றைக்கு முதல் நாள் என்ன கிழமை?
1) சனி. 2) ஞாயிறு. 3) திங்கள். 4) செவ்வாய்

24. 2008 பெப்ரவரி 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை எனின், 2008 மார்ச் 2ஆம் திகதி என்ன கிழமை?
1) செவ்வாய். 2) திங்கள். 3) ஞாயிறு. 4) புதன்.

* மிகச் சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.


25. ஈசான மூலைக்கு எதிர்த்திசை எது?
1) அக்கினி மூலை. 2) நிருதி மூலை. 3) வாயு மூலை.

26. ஒருவரின் நிழல் எப்போதும்,
1) கிழக்கில் விழும். 2) மேற்கில் விழும்.
3) சூரியனுக்கு 4) எதிர்த்திசையில் விழும்.

27. வாடிக்கையாளன் என்போன்,
1) பொருட்களை நிறுப்போன். 2) பொருட்களை உற்பத்தி செய்பவன்.
3) பொருட்களை விலைக்கு வாங்குவோன்.

28. பாடசாலை என்பது பற்றிய பொருத்தமற்ற கூற்று,
1) நற்பிரஜைகளை உருவாக்கும் இடம். 2) பரீட்சைக்கு தயாராக்கும் இடம்.
4) கற்றல், கற்பித்தல் நடைபெறும்

* அடங்கல் படத்தின் அறிவைக் கொண்டு விடையளிக்குக.





**அன்பு மாணவர்களே!**


இப்பகுதியில் வெளியாகியுள்ள வினாத்தாள் - 1 இற்கான விடைக்குறிப்புகளுடன், வினாத்தாள் - 11 எதிர்வரும் வியாழக்கிழமை பிரசுரமாகும். இப்பகுதியில் தொடர்ச்சியாக வெளிவரும் வினாத்தாள்களை நேரங்கணித்துப் பயிற்சிசெய்து இவ் வருடம் நடைபெறவுள்ள அரச பரீட்சைக்கு இன்றே தயாராகுங்கள். உங்கள் விடைகளை ஆசிரியரின் விடைகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க மறவாதீர்கள்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

29. தரவின் அடிப்படையில் சரியான முறையில் கட்டமைப்பு செய்யப்பட்டிருக்கும் விடை,



30. உணவு - மீன் - இறைச்சி ஆகியவற்றுக்கிடையிலான சரியான தொடர்பைக் காட்டும் அடங்கல் படம்,




31. 30 இருக்கை உள்ள வாகனத்தில் அனைத்து இருக்கைகளிலும் பயணிகள் காணப்பட்டனர். அதில் அரைவாசியில் ஆண்களும் மிகுதியில் 8 பெண்களும் மற்றும் சிறுபிள்ளைகளும் காணப்பட்டனர் எனின், அதில் பயணம் செய்த சிறுபிள்ளைகள் எத்தனை பேர்?


1) 15 2) 4 3) 8 4) 7


32. காசிமிடம் 50 சத நாணயம் 10உம், வஷிமிடம் 25 சத நாணயம் 16உம், இர்ஷாத்திடம் 5 சத நாணயம் 30உம் காணப்பட்டன. இவர்களில் அதிக பெறுமதி பணம் வைத்திருப்பவர் யார்?

1) காசிம். 2) வஷிம். 3) இர்ஷாத்.

33.



34. வற்றல் என்பது  என எழுதப்படின் முற்றம் என்பதை எழுதிய சரியான முறை.



35. எழுத்துப் பிழையற்ற வசனத்தின் கீழ்க்கோடிடுக.

1) மகாத்மா காந்தி ஏலைகளுக்காக உளைத்தார்.
2) நாம் இறைவனைத் தொழவேண்டும்.
3) நாண் பாடசாலைக்கு சென்றேன்.

36. அடைப்பினுள் உள்ள சொற்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

திண்மை, புனித, துறவி, மையத்து, தந்தி, திகதி

காப்பு → புன்னகை → கைதி → .............. → .............. → ..............

37. சம இடைவெளி உள்ள இருதந்திக் கம்பங்களுக்கிடையிலான தூரம் 15m எனின், சம இடைவெளி உள்ள 7 கம்பங்களுக்குகிடையிலான தூரம் எத்தனை மீற்றர்?


1) 105m 2) 75m 3) 90m

38. சதுர வடிவான பூம்பாத்தியை ஒரு பக்கமாகப் பார்த்தபோது 8 தூண்கள் தெரிந்தன எனின், பூம் பாத்தியை சுற்றி எத்தனை தூண்கள் நடப்பட்டிருக்கும்?

1) 32 2) 30 3) 28

39. இங்கு அதிக தடவை வந்துள்ள எழுத்து எது?

இ, ஏ, ஐ, இ, ஏ, ஆ, உ, ஐ, ஓ, இ, ஒ, ஆ, உ, இ, ஆ, எ,
.....................................

40. 

இங்கு அதிக தடவை வந்துள்ள உரு எது?
.....................................

ஆக்கம்:-

**திரு.யு.எல்.எம்.சாஜித்,**
கல்முனை/அல் மஷ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை, நிந்தவூர்.

**கல்விச்சுடர் தொடர்பான**
விமர்சனங்களுக்கும் கருத்துக்களுக்கும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்க.
*011-2399666 (125/3) / 071-6850005 / 071-4273035.*

**இப்பரீட்சைத் தொடருக்கு வினாத்தாள்களை வழங்கும் ஆசிரியர்களின் விவரம்**

* திரு.சந்திரபவன் - கொழும்பு
* திரு.தயாளலிங்கம் - திருமலை
* திரு.பத்மநேசன் - திருமலை
* திரு.பிரதீப்குமார் - கொழும்பு
* திரு.சேனநாயக்கா - கொழும்பு

## அன்பு மாணவர்களே!

இப்பகுதியில் உள்ள வினாக்கள் தொடர்பாக ஏதாவது சந்தேகங்கள், தெளிவின்மைகள் இருப்பின் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு தெரிவித்தால், உரிய ஆசிரியர் மூலம் தெளிவுபடுத்தப்படும். 071-6850005 / 071-4273035



யாழ்.சாயி சேவா நிலையத்தில் நடைபெற்ற நத்தார் விழாவில் இடம்பெற்ற சிறுவர்களின் கலை நிகழ்வைப் படத்தில் காணலாம்.
நத்தார் தாத்தாவும் நிற்கின்றார்.



ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்பாட்டு அறையினை வலிகாமம் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்து வைப்பதையும், அருகில் பாடசாலை அதிபர் த.சிவசுடாச்சம், சொலிடார் நிறுவன தலைவர் ஆ.பேரின்பநாதன், உலக உணவு நிறுவன இணைப்பாளர் ஜெயரூபன் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (100)



பிள்ளைநேயப் பாடசாலையாக வெற்றிபெற்ற சுன்னாகம் இராமநாதன் கல்லூரிக்கான விருதை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அதிபரிடம் கையளிக்கின்றார்.
அருகில் கல்லூரி ஆசிரியர்கள் நிற்கின்றனர்.



சுவாமி விவேகானந்தரின் 147 ஆவது ஜெயந்தி விழா தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியில் அண்மையில் நடைபெற்றது.
நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன், யாழ். பல்கலைக்கழக மாணவருக்கு கொழும்பு இராமகிருஷ்ண மிஷனால் வழங்கப்பட்ட கல்வி ஊக்குவிப்பு நிதியை வழங்குகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிட்டனின் வதைமுகாம்




நைஜீரியாவைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும், அவரது 5 வயது மகனும் பிரிட்டனின் சட்டவிரோத குடியேற்ற வாசிகளை திருப்பி அனுப்புவதற்கான முகாமில் 50 நாள்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டிருந்த விவகாரம் மறுபடியும் பிரிட்டனின் குடியேற்றக் கொள்கை குறித்த சர்ச்சையை உண்டு பண்ணியுள்ளது.

தங்களுடைய அகதி அந்தஸ்துக் கோரிக்கை மறுக்கப்பட்ட நிலையில் நைஜீரியாவைச் சேர்ந்த இந்தப் பெண்மணியும், அவரது குழந்தையும் குறிப்பிட்ட முகாமில் 50 நாள்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். நைஜீரியாவுக்கு விமானத்தில் இவர்களை அனுப்புவதற்கான முயற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் சட்டத்தரணிகள் அதனைத் தடுத்து நிறுத்தியதைத் தொடர்ந்தே இவர்கள் அந்த முகாமில் தடுத்து வைக்கப்பட்டனர். பிரிட்டனின் சட்டத்தின்படி 28 நாள்களுக்கு மேல் குழந்தை ஒன்றை தடுத்துவைக்க முடியாது.

பிரிட்டனின் குடியேற்றவாசிகள் குறித்த கொள்கை இந்த நடவடிக்கை காரணமாகப் பலத்த விமர்சனங்களுக்கு உள்ளாகி இருக்கிறது.

யார்ள் வூடில் உள்ள குடியேற்ற வாசிகளை வெளியேற்றுவதற்கான இந்தமுகாம் 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இது 900 பேரை தடுத்து வைக்கக்கூடிய வசதிகள் கொண்டது. ஐரோப்பாவிலேயே மிகப்பெரிய குடியேற்றவாசிகள் தடுப்புமுகாம் இது. இந்த முகாம் ஆரம்பிக்கப்பட்ட ஒருசில நாள்களிலேயே முதலாவது



உண்ணாவிரதப்போராட்டத்தை இந்த முகாமில் தடுத்துவைக் கப்பட்டிருந்த ரோமன் நாட்டவர்கள் மேற்கொண்டனர். இதன்பின்னர் தொடர்ச்சியாக பல சத்தியாக் கிரகப்போராட்டங்களையும் சர்ச்சைகளையும் இந்த முகாம் சந்தித்து வருகின்றது.

பிரிட்டனின் குடியேற்றக் கொள்கையில் மிகவும் சர்ச்சைக்குரிய விடயமாக விளங்குவது, அது அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டவர்களை நடத்தும் விதமாகும். தொடர்ச்சியாக அரசாங்கங்கள் பல நடைமுறைகளை கொண்டு வந்துள்ள போதிலும் அவை அந்த முகாமில் உள்ளவர்களைப் பாதுகாப்பதற்கு உரியனவாக அமையவில்லை. எவ்வித குற்றச்செயல்களிலும் ஈடுபடாத குடியேற்றவாசிகளைக் கூட 3 வருடம் தடுத்துவைப்பதற்கு பிரிட்டனின் சட்டத்தில் இடமுண்டு. மேலும் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டவர்களுக்கு எந்தவித உரிமையும் கிடையாது. அவர்கள் தமக்குள்ள உரிமைகள் பற்றித் தெரிந்திருப்பதும் இல்லை. இதன் காரணமாக இந்த முகாம்களில் உள்ளவர்கள் தொடர்ச்சியாக துஷ்பிர யோகங்களுக்கு உள்ளாகின்றனர்.

இம்முகாம்களில் நிறவெறி காணப்படுவதாகவும் குற்றச்சாட்டுகள் வெளியாகியுள்ளன. இங்கு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் எவ்வளவு மோசமாக நடத்தப்படுகின்றனர் என்பதை சில வருடங்களுக்கு முன்னர் பி.பி.சி. வெளிக்கொணர்ந்தது. பலர் கடுமையாகத் தாக்கப்பட்டது குறித்து பி.பி.சி. தனது நிகழ்ச்சியில் வெளிப்படுத்தியதைத் தொடர்ந்து இந்தமுகாம்களில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த சிலர் பணி நீக்கம் செய்யப் பட்டனர்.

கடந்தவருடம் இன்னுமொரு அமைப்பு, தடுத்து வைக்கப்பட்டுள்ள குடியேற்றவாசிகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட, தாக்கப்பட்ட 300 சம்ப வங்களை வெளிப்படுத்தியது.

இந்த முகாம்களில் உள்ள பலர் தாங்கள் நிறரீதியாக நிந்திக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். கண்மூடித்தனமாக பலர் நாடு கடத்தப்படுகின்றனர் அரசியல் தஞ்சம் அல்லது அகதி அந்தஸ்து மறுக்கப்பட்டு முகாம்களில் தடுத்து வைக்கப் படுபவர்களின் எண்ணிக்கை



பலமடங்காக அதிகரித்துள்ளது என்றும் இந்த அமைப்பு குற்றஞ் சாட்டியுள்ளது.

இந்த முகாம்களில் பலர் மிகமோசமான நிலையில் தடுத்து வைக்கப் பட்டிருப்பதையும் இதன் காரணமாக அவர்களில் பலர் தற்கொலை முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதையும் அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. ஏப்ரல் 2006 இற்கும் மார்ச் 2007 இற்கும் இடையில் 199 பேர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர். இவ்வாறு தற்கொலை முயற்சிகள் ஒவ்வொரு நாளும் இடம்பெறுகின்றன.

2007 மே மாதம் இங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள பல பெண்கள் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை மேற்கொண்டனர். இவர்கள் தாங்கள் உண்ணாவிரதம் இருப்பதற்காகத் தண்டிக்கப்படுவதாகவும் தங்களுக்கு போதிய சட்டவசதி இல்லை எனவும் தெரிவித்தனர்.

மேலும் இந்தப் பெண்கள் தங்களுடைய சுதந்திரம் பேணப்படவேண்டும், தாங்கள் தடுத்துவைக்கப்பட்டுள்ள அறைகளுக்குள் ஆண் காவலாளிகள் அனுமதியின்றி நுழையக்கூடாது என்பது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

இதற்கு முன்னதாக 2002 இல் யார்ள்வூடில் உள்ள முகாமின் கட்டடமொன்று ஆர்ப்பாட்டக் காரர்களால் தீவைக்கப்பட்டது. 55 வயதுப் பெண்மணியொருவர் தாக்கப்பட்டதைத் தொடர்ந்தே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பிரிட்டனிலிருந்து வெளியாகும் 'த கார்டியன்' செய்தித்தாள், தடுத்து வைக்கப்பட்டுள்ள குடியேற்றவாசிகள் சந்தித்துள்ள துஷ்பிரயோகங்களை சமீபத்தில் பட்டிய லிட்டுள்ளது.

பிரிட்டனில் தஞ்சம் நிராகரிக்கப்பட்ட வெளிநாட்டவர்கள் தாக்கப்படுவது இந்த முகாம்களில் வழமையான நிகழ்வு எனத் தெரிவித்துள்ள கார்டியன் பெண் மணியொருவர் மிகவும் பரிதாபகரமான நிலையில் வாகனம் ஒன்றில் ஏற்றப்பட்டு பலவந்தமாக விமான நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார் எனினும், அந்தப் பெண்ணின் பரிதாப நிலையைப் பார்த்த விமானமோட்டி அவரைக் கொண்டு




செல்ல மறுத்தார் என தெரிவித்துள்ளது. இந்த முகாம்களில் உள்ள பெண்கள் தாங்கள் கறுப்புக் குரங்குகள் என்று நிந்திக்கப் படுவதாகவும் இன்னும் பலர் துன்புறுத்தல்களுக்கு உட்படுவதாகவும் பழுதடைந்த உணவு தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கின்றனர்.


கார்மொன்ஸ்வேர்த்தில் உள்ள அடைக்கலக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டவர்களுக்கான முகாமில் தமது பரிதாபநிலை குறித்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றை பார்த்ததற்காக சிலர் தண்டிக்கப்பட்டனர். இதன் காரணமாக அந்த முகாமில் பாரிய வன்முறை வெடித்தது. இதற்கு சிலநாள்களுக்கு முன்னர் இந்த முகாம் பாரிய பாதுகாப்பு கெடுபிடிமிக்க சிறைச்சாலை போன்று தென்படுவதாக அறிக்கை ஒன்று வெளியாகி பிரிட்டனின் கௌரவத்தை கேள்விக் குறியாக்கியது.

இதேபோன்று யார்ள் வூடில் 100இற்கும் மேற்பட்ட பெண்கள் மேற்கொண்ட போராட்டத்தைத் தொடர்ந்து அவர்களுடைய உரிமைகள் மேலும் மறுக்கப்பட்டன. அவர்கள் காலை 7மணிமுதல் மாலை 7மணிவரை அறைக்குள் பூட்டிவைக்கப்பட்டனர் கையடக்கத் தொலைபேசி பறிக்கப்பட்டது. தொலைக்காட்சி பார்ப்பதற்கான உரிமை மறுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அந்த முகாமில் இருந்த பெண்கள் அனைவரும் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

இந்த முகாமில் ஒருவர் எட்டுவருட காலத்துக்குப் பின்னர் தடுத்து வைக்கப்பட்டு தனது நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். இந்த முகாமுக்கு நிதியுதவி வழங்கும் அமைப்பொன்று, இவ்வாறு வெளிநாட்டுப் பிரஜைகளை நீண்டகாலம் தடுத்துவைப்பதன் மூலம் பிரிட்டன் தனது பொதுமக்களின் வரிப்பணத்தை வீணாக்குகின்றது எனக் குற்றம்சாட்டுகின்றது. மேலும் தமது சொந்தநாடுகளுக்கு திருப்பி அனுப்பமுடியாத நிலையிலுள்ளவர்கள் மறக்கப்படுகின்றனர். நிரந்தரமாக அங்கேயே தடுத்துவைக்கப் படுகின்றனர் என இந்நிறுவனத்தின் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இது தடுத்து வைக்கப்பட்டவர்களுக்கு பாரிய உளவியல் பிரச்சினைகளை உண்டுபண்ணியுள்ளது. பெரும்பாலான்வர்கள் மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருக்கின்றனர். தற்கொலைக்கும் முயற்சிக்கின்றனர்.

லண்டனைச் சேர்ந்த தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கான ஆதரவு அமைப்பு 20 மாத காலப் பகுதியில் 188 நபர்கள் குறித்து ஆராய்ந் தது. இவர்களில் 18பேர் மாத்திரமே நாடு கடத்தப்பட்டனர். 57வீதமானவர் கள் தொடர்ந்தும் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு ஒருவருடத்துக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 250 என அந்த அமைப்பு தெரிவிக்கின்றது. ஒருவருடத்துக்கு மேல் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களை நாடு கடத்துவது கடினம் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. ஒருவரை 8 வருடத்துக்கு மேல் தடுத்து வைப்பது என்[illegible] வேடிக்கையானது. உலகின் வேறு [illegible]களில் இவ்வாறான நிலை இல்லை. [illegible]ட்டனிலும், டென்மார்க்கிலும் மாத்திரமே இந்த நிலை காணப்படுகிறது. ஐரோப்பிய ஒன்றியத்தின் சட்டவிதிகளின்படி 18 மாதத்துக்கு மேல் ஒருவரை தடுத்துவைக்கமுடியாது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. *

- ரஜீவன் -




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா கடந்த 7ஆம் திகதி நடைபெற்றது. விநாயகர் தேருக்கு எழுந்தருளி வருவதையும் அடியார்களுக்கு அருள் பாலித்து தேர் உலா வருவதையும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

## அம்மை நோயால் பாதிக்கப்பட்டு வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்

யாழ்ப்பாணம், பெப்.12

அம்மை நோயினால் பாதிக்கப்பட்ட வயோதிபர் சிகிச்சை பயனின்றி மரணமானார்.

அல்லாரை வடக்கைச் சேர்ந்த முத்தையா கயிலாயபிள்ளை (வயது 64) என்பவரே மரணமானவராவார்.

அம்மை நோயினால் பீடிக்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பயனளிக்காததால் அங்கிருந்து சாவகச்சேரி ஆதார வைத்திய சாலைக்கு மாற்றம் செய்யப்பட்டதாகவும் அவர் அங்கு கடந்த 6 ஆம் திகதி இரவு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் அம்மை நோயினால் பீடிக்கப்பட்ட ஒருவர் இறந்துள்ளமை தென்மராட்சிப் பிரதேச மக்கள் மத்தியில் ஒருவித பயத்தை ஏற்படுத்தியுள்ளது.

(203-207)

## நலியும் அன்பு

ஒரு இளைஞனுக்கு திருமணம் நடந்தது. திருமணம் முடிந்தபின், மூன்றாம் நாள் தம்பதியர் ஒரு பூங்காவில் நடந்து சென்றனர். அந்த இளைஞன் வழியில் முள்ளைக் கண்டான். முள்ளைக் கண்டதும், தன் இளம் மனைவி முள்ளின்மேல் கால் வைத்துவிடுவாள் என்ற பதற்றத்தில் முள், முள் என்று எச்சரித்து அவள் கையைப் பற்றிக் கொண்டான். அந்தக் கணத்தில் அவனது Wife (மனைவி) அவனுக்கு Life (உயிர், வாழ்க்கை) யாக இருந்தாள். ஆகவே அவன் அவசரமாக, அவளைப் பின்னுக்கு இழுத்தான்.

இதே தம்பதியர், சில காலங்கழித்து, அதே பூந்தோட்டம் வழியாக நடந்து சென்றனர். முன்பு போல வழியில் முள்ளைக் கண்டான். முன்பு போல் பதற்றம் இப்போது அவனிடம் இல்லை. முள் இருக்கிறது, கவனித்து நட என்று மனைவியிடம் கூறினான்.

ஒரு ஆண்டு கடந்தது. அதே பூந்தோட்டம் வழியாகச் செல்லும் போது, மறுபடியும் முள்ளைக் கண்டான். அன்பு அவனுக்கு குறைந் திருந்தது. உன் கண் எங்கே போயிற்று? உன்னால் முள்ளைப் பார்க்க முடியவில்லையா? உனக்கு என்ன நேர்ந்தது என்று கேட்டான். உலகியல் அன்பு, காலஞ்செல்லச்செல்லத் தேய்கிறது, குறைகிறது.

தெய்வீக அன்பு ஆண்டுகள் கடந்தாலும், பிறவிகள் கடந்தாலும், யுகங்கள் கடந்தாலும் மாறாமல் அழியாமல் இருக்கிறது. இது நிரந்தர அன்பு. மதுரமான அன்பு.



இறைவனது சொல்லும் மதுரம். அவரது செயலும் மதுரம். அவரது அனைத்தும் மதுரமே. ஆகவே தான் கோபிகைகள், 'மதுராதிபதே மதுரம், மதுரம், மதுரம் என்று புகழ்ந்து பாடினர். கிருஷ்ணனை விட்டுப் பிரிந்து இருக்க இயலாமல் தவித்தனர்.

சாயி சிந்தனை

## போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பது அரசின் கடமை

### பிரான்ஸ் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் கருத்து

புதுச்சேரி, பெப். 12

''இலங்கையில், உள்நாட்டு போரில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களின் மறுவாழ்வுக்கு அந்நாட்டு அரசு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்'' -இவ்வாறு பிரான்ஸ் நாட்டின் பாதுகாப்புத்துறை இணையமைச்சர் ழான் மரியே போக்கல் கூறினார்.

தென்னிந்திய புதுச்சேரி மாநிலத்திற்கு விஜயம் செய்துள்ள அவர் கடந்த திங்கள் அங்கு செய்தியாளர்களை சந்தித்தார். இதன்போதே இக்கருத்தை முன் வைத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இலங்கையில் தமிழர்களின்மறுவாழ்வுக்கு அங்குள்ள அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிரவாதத்தை பிரான்ஸ் ஆதரிக்கவில்லை. இலங்கையில் நிலவும் பிரச்சினைக்கு பேச்சு மூலம் தீர்வுகாண வேண்டும்.

இலங்கையில் ஒருமைப்பாடு நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் பிரான்ஸ் அரசு அக்கறையாக இருக்கிறது. உலக நாடுகள் அனைத்தும் தீவிரவாதத்தை எதிர்த்துப் போராடி அமைதியை நிலைநாட்ட முன் வந்துள்ளன.

தீவிரவாதத்தை முறியடிக்க ஐக்கிய நாடுகள் சபையில் உலக நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்று, விவாதித்து அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வருகின்றனர். இதில் இந்தியாவும், பிரான்ஸும் இடம் பெற்றுள்ளன. விரைவில் இந்த முயற்சிகள் சிறந்த பலனைத் தரும் என நம்புகிறேன். - என்றார்.

(க)

## இலங்கை நிலை குறித்து டென்மார்க் இந்தியாவுடன் கலந்தாலோசனை

கொழும்பு, பெப். 12

இலங்கையின் தற்போதைய நிலை குறித்து இந்தியாவிடம் டென்மார்க் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துள்ளது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட டென்மார்க் வெளிவிவகார அமைச்சர் பெர் ஸ்டிக் மொலர் இலங்கையின் தற்போதைய நிலை குறித்து ஆராய்ந்தார். அப்போது இலங்கையின் வடபகுதியில் மோதலில் சிக்கியுள்ள மக்களின் நிலை குறித்து தனது ஆழ்ந்த கவலையையும் அவர் வெளியிட்டுள்ளார்.

இதன்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில் உள்ள மக்களின் பாதுகாப்புக் குறித்த இந்தியாவின் கவலையை மீண்டும் தெரிவித்துள்ளார் பிரணாப் முகர்ஜி. இலங்கை அரசு பாதுகாப்பு வலயங்களை மதிக்கும். அதே வேளை பொதுமக்களைப் பாதுகாக்கத் தன்னால் முடிந்தவற்றை மேற்கொள்ளும் எனவும் அவர் கூறினார்.

பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்வதை உறுதி செய்வதற்கு இந்தியா தன்னால் முடிந்தவற்றைச் செய்யும் எனவும் முகர்ஜி டென்மார்க் வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (சி)

## சாதனை படைக்கும் மாணவர்களின் கல்வியில் ஆசிரியர்கள் அதிக அக்கறை கொள்ள வேண்டும்

### உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் கருத்து

நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற சொல்லொன்னா துயரங்களின் மத்தியிலும் இப்படியான போட்டிகள் நடாத்தப்பட்டு அதிலே மாணவர்கள் சாதனைகள் படைக்கிறார்கள்.

இப்படியான இணைப்பாட விதானத்திலே சாதனை படைக்கின்ற மாணவர்களது கல்வியிலே ஆசிரியர்கள் அதிகூடிய அக்கறை எடுத்து கவனிக்க வேண்டும். ஏனென்றால் இணைபாடத்தில் சாதனை படைக்கின்ற மாணவன் தனது கல்வியை கைவிட்டு விடுவான். எனவே அதை கவனிக்கின்ற பொறுப்பு ஆசிரியர்களுக்கு அதிகம் உண்டு.

இவ்வாறு தெரிவித்தார் வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.நடராஜா.

பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் தெரிவித்தவை வருமாறு:

சென்ற வருடம் இப்பாடசாலையில் படித்து தற்போது மேற்படிப்பிற்காக வேறு பாடசாலை சென்றுள்ள மாணவன் ஒருவன் அந்தப் பாடசாலையிலேயே மாவட்ட மட்டம், மாகாண மட்டம் ஆகிய வற்றில் சாதனை படைத்து என்னுடன் தேசிய மட்டத்திற்காக வந்திருந்தான். அவன் அங்கு பெற்றசாதனைஇந்தப்பாடசாலையையேசாரும்.

அவனைப் போல ஏனைய மாணவர்களும் முறையாக சிறந்த பயிற்சிபெற்று போட்டிகளிலே பங்குபற்றி பல சாதனைகளை நிலைநிறுத்த வேண்டும்.

இதற்கேதுவாக இக்கல்லூரிக்கு நிரந்தரமாக ஒரு உடற்கல்வி ஆசிரியர் நியமிப்பதற்கான நடவடிக்கை நிச்சயம் எடுப்பேன். அதைப் பயன்படுத்தி சிறந்த முறையாக பயிற்சிகளைப் பெறவேண்டும்.

அத்தோடு பெரியோர்களை மதிக்கின்ற குருவிற்கு மதிப்பளிக்கின்ற பண்புகள் இங்கு சில மாணவர்களிடத்தே சிறப்பாக உள்ளது. இருந்தாலும் அதேபோன்று ஏனைய மாணவர்களும் அதைப் பின்பற்றி எதிர்காலத்தில் எல்லாத்துறையிலும் சாத னையாளர்களாகச் சிறந்து விளங்க வேண்டும் - என்றார்.

(202-112)

## தினமும் மக்கள் கொல்லப்படுகின்றனர் அமெரிக்கத் தூதர் ஏன் கண்டிக்கவில்லை?

### அடைக்கலநாதன் எம்.பி. சீற்றத்துடன் கேள்வி

கொழும்பு, பெப். 12

இலங்கை அரசின் கட்டுப்பாட்டில் உள்ள விசுவமடுப் பகுதியில் நடைபெற்ற குண்டுத் தாக்குதலுக்கு உடனடியாக கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, வன்னியில் படையினர் நடத்திய பல்வேறு தாக்குதல்களில் 500இற்கும் அதிகமான பொதுமக்கள் கொல்லப்பட்டும் ஆயிரத்துக்கும் அதிகமானோர் காயப்பட்டபோதும் கண்டனம் தெரிவிக்காதது ஏன் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பியுள்ளார்.

படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள விசுவமடுப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலின் உண்மை நிலைமை என்னவென்று யாருக்கும் தெரியாது. அத்துடன் அப்பிரதேசத்தில் போர் தீவிரமாக நடைபெறுகின்றது.

இந்நிலையில் இலங்கை அரசும் அதன் படைத்தரப்பும் [illegible] கேட்டு எப்படிக் கண் [illegible] யும் எனவும் செல்வம் அடைக்கலநாதன் கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விசுவமடு பகுதியில் திங்கட்கிழமை நடைபெற்ற குண்டுத் தாக்குதலில் படையினர் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். அத்துடன் அங்கு நின்ற பொதுமக்களில் பலர் கொல்லப்பட்டும் காயமடைந்தும் உள்ளனர். இவை படையினர் கூறிய தகவல்கள்தான்.

உண்மையில் அங்கு எப்படி குண்டு வெடித்தது என்பது குறித்து எவருக்கும் தெரியாது. எவ்வாறாயினும் படையினருடன் பொதுமக்களும் அங்கு கொல்லப்பட்டிருக்கின்றனர் என்பது தெரிகின்றது. அதனையிட்டு நாங்களும் வருத்தமடைகின்றோம்.

ஆனாலும், இக்குண்டு வெடிப்பு எப்படி நடைபெற்றது, பொதுமக்கள் அதற் [illegible] கொண்டனர் என்பதை [illegible] முன்னர் படையினர் கூறுவதனை கேட்டுவிட்டு அமெரிக்க தூதுவர் கண்டன அறிக்கை வெளியிட்டிருப்பது வேடிக்கையானது.

அங்கு நின்ற பொதுமக்கள் கொல்லப்பட்டமை அமெரிக்க தூதுவருக்கு வேதனையாக இருந்திருக்குமானால் வன்னியில் படையினரின் எறிகணை மற்றும் பீரங்கித் தாக்குதல்களில் ஒவ்வொரு நாளும் 50, 60 பொதுமக்கள் கொல்லப்புடுகின்றனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைகின்றனர். இது அவருக்கு வேதனையாகத் தெரியவில்லையா?.

அரசு எப்படியான பயங்கரவாத நடவடிக்கையில் ஈடுபட்டாலும் அதனை ஜனநாயகமாக பார்க்கும் அமெரிக்கா போன்ற வல்லரசுகள் எப்போதும் தங்கள் நலன்களை கருத்தில் கொண்டுதான் அறிக்கை விடுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.

இருந்தாலும் தமிழர் விவகாரத்தில் அமெரிக்கா போன்ற வல்லரசுகளின் நடவடிக்கையில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது - என்றார் அவர்.

(சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத ஒழிப்புக்கான நடவடிக்கை குறித்து இலங்கைக்கு 'வோல் ஸ்ரீட்' சஞ்சிகை பாராட்டு

## கூறி மகிழ்கிறார் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

''யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்க முடியாது என்பதே உலக நாடுகளின் கருத்தாக இருந்தது. தலைமைத்துவமும் வழிகாட்டலும் உரிய முறையில் கையாளப்பட்டால் அது நிச்சயம் சாத்தியமாகும். இதனை இலங்கை இன்று நிரூபித்திருக்கின்றது.

- இவ்வாறு 'வோல் ஸ்ரீட்' சஞ்சிகை தெரிவித்திருக்கின்றது என அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற, மத்திய மற்றும் வடமத்திய மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பிலான மக்கள் சுதந்திர முன்னணியின் ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு-

''பயங்கரவாதத்துக்கு யுத்தம் மூலமான வெற்றி தொடர்பில் சர்வதேச நாடுகளின் பார்வை இன்று எமது பக்கம் திரும்பியுள்ளது. ஒரு பயங்கரவாத இயக்கத்திற்கு நாட்டைப் பல்வேறு வழிகளில் அழிக்கமுடியும் .

பயங்கரவாதத்தை ஒழிக்க யுத்த ரீதியான தீர்வு சாத்தியமாகாது என சிலர் கூறினார்கள். ஆனால் இன்று என்ன நடந்திருக்கிறது? இரு வாரங்களுக்கு முன்னர் உலகில் பிரபலமான 'வோல் ஸ்ரீட்' சஞ்சிகை எமது நாட்டைப்பற்றிக் குறிப்பிட்டிருந்தது. ''யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை ஒழிக்கமுடியாது என்பதே உலக நாடுகளின் கருத்தாக இருந்தது. தலைமைத்துவமும் வழிகாட்டலும் உரிய முறையில் கையாளப்பட்டால் அது நிச்சயம் சாத்தியமாகும். இதனை இலங்கை இன்று நிரூபித்திருக்கின்றது.'' இப்படி உலக ஜனாதிபதிகள், பிரதமர்களின் அங்கீகாரம் பெற்ற சஞ்சிகையான 'வோல்ஸ் ரிட்' தெரிவித்திருக்கின்றது.

யுத்தத்தின் மூலம் பயங்கரவாதத்தை வெல்லமுடியும் என்பதைச் சிலர் நம்ப மறுக்கிறார்கள். இதனை நம்புபவர்கள், இரு வரிகளில் மட்டுமே பதிலளிக்கக் கூடியதாக இருக்கும். அது தான், ''பயங்கரவாதத்தை யுத்தம் மூலமாக வெற்றி கொள்ள முடியும்; இன்று இதற்கு ஓர் உதாரணம் இலங்கை'' ஆகும்.

பயங்கரவாதம் என்பது எமது நாட்டை மட்டுமல்ல உலகையே ஆட்டிப் படைக்கும் ஒன்று. சார்க் அமைப்புக்களின் தலைவர் பயங்கரவரதப் பிரச்சினை பற்றியே குறிப்பாகச் சுட்டிக்கட்டியிருந்தார் . இலங்கையில் இடம்பெறும் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள், பயங்கரவாதம் நிலவும் ஏனைய நாடுகளுக்கு அதைத் தீர்க்கும் ஒரு சக்தியாகக் கூட இருக்கலாம்.

''ஒரு செயலை செய்யும்போது, எல்லோரும் அதன் வெற்றி பற்றியே யோசிக்க வேண்டும்'' என்று வில்ஸ்டன் சேர்ச்சில் கூறினார்.

நாட்டில் யுத்தம் நடக்கிறது. அதனால் நாட்டின் பொருளாதாரம் பாதிக்கப்படுகிறது என்றே எல்லோரும் கூறுகிறுர்கள் . இன்று உலக நாடுகளும் கூட பொருளாதார பிரச்சினைகளை எதிர்நோக்கத்தான் செய்கின்றன. இதனால் அமெரிக்கா, ஜப்பான் போன்ற முக்கிய நாடுகளும் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. ஆனால் இலங்கையில் அந்தளவில் பாதிப்பு ஏற்படவில்லை. காரணம் ஜனாதிபதி மேற்கொண்ட பொருளாதார செயற்பாடுகளே ஆகும்- என்றார்.

# புற்றுநோய்க்கு அதி நவீன சிகிச்சை; புதிய கருவி தமிழகத்தில் அறிமுகம்

கொழும்பு,பெப்.12

இந்தியாவில் முதன்முறையாக புற்றுநோய்க்கு அதிநவீன சிகிச்சையளிக்கும் 'சைபர் நைப்' கருவி சென்னை அப்பலோ புற்றுநோய் சிறப்பு மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து அப்பலோ மருத்துவமனைத் தலைவர் பிரதாப் ரெட்டி கூறுகையில்:

அப்பலோ மருத்துவக் குழுமத்தில் புற்றுநோய்க்கு சிகிச்சையளிக்க 75 கோடி ரூபா செலவில் புதிய சிறப்பு மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது. இங்கு புற்றுநோய்க்கு கதிர்வீச்சு சிகிச்சையளிக்கும் 'சைபர் நைப்' எனும் புதிய நவீன சிகிச்சைக் கருவியை இந்தியாவில் முதன்முறையாக அறிமுகப்படுத்தியுள்ளோம். இதன் விலை 35 கோடி ரூபா.

இக்கருவி மூலம் உடலின் எந்தப் பாகத்தில் புற்றுநோய்க் கட்டி இருந்தாலும் அதன் மீது துல்லியமாகக் கதிர்வீச்சைப் பாய்ச்சிக் குணப்படுத்தமுடியும். முன்பு இருந்த சிகிச்சை முறையில் இதுபோன்றதொரு புற்றுநோய்க் கட்டியைக் குணப்படுத்த 28 முறை கதிர்வீச்சைப் பாய்ச்சி படிப்படியாக அவை அகற்றப்பட்டு வந்தது. தற்போது ஒரே முறை குறிப்பிட்ட கட்டியின் மீது 'சைபர் நைப்' மூலம் கதிர்வீச்சைப் பாய்ச்சி குணப்படுத்தலாம். புற்றுநோய்க்கட்டி உள்ள இடம் 'ஸ்கானிங்' மூலம் துல்லியமாக முதலில் கண்டறியப்படும். இந்த விவரம் 'சைபர் நைப்' கருவிக்கு இடமாற்றம் செய்யப்படும். இத்தகவலின் அடிப்படையில் கட்டி உள்ள இடத்தில் துல்லியமாக கதிர்வீச்சு பாய்ச்சப்படும்.

இந்த முறைச் சிகிச்சையில் பக்க விளைவுகள் மிகக் குறைவாகவே இருக்கும். இந்த சிகிச்சையைப் பெறுவதற்கு ஐந்து லட்சம் ரூபா வரை செலவாகும். புற்றுநோயின் ஆரம்ப கட்டத்தில் சிகிச்சைக்கு வந்தால் உறுதியாக குணமாக்க முடியும். நோய் முற்றிய நிலையில் வந்தால் இச்சிகிச்சை மூலம் வாழ்நாளை அதிகரிக்கமுடியும்.

(202-201)

# எந்தவொரு நிர்ப்பந்தமும் இன்றியே மாணவர்களுக்கு ரின்மீன் வழங்கப்படுகின்றது

## யாழ்.அரச அதிபர் கூறுகின்றார்

யாழ்ப்பாணம்,பெப்.12

யாழ்.மாவட்டப் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவில் ரின்மீன் அவர்களின் விருப்பத்தின்படியே வழங்கப்படுகின்றது. இதில் எந்தவொரு நிர்ப்பந்தமும் இல்லை என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்துள்ளார்.

மாணவர்களுக்கு மதியம் வழங்கும் உணவில் மீனைச் சேர்ப்பதை நிறுத்த வேண்டும் என நல்லை ஆதீன முதல்வர் விடுத்திருந்த கோரிக்கைக்குப் பதிலளித்தே யாழ்.அரச அதிபர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

யாழ்.குடாநாட்டில் சகல பாடசாலை மாணவர்களுக்கும் போசாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் நோக்குடன் உலக உணவுத் திட்டத்தால் ஆண்டு ஒன்று தொடக்கம் ஆண்டு ஒன்பது வரை மதிய உணவு வழங்கப்பட்டு வருகின்றது. இதற்காக அரிசி, பருப்பு, கோன் சோயா கலவை, சீனி, மரக்கறி எண்ணெய் என்பன வழங்கப்பட்டு வந்தது.

ஆயினும் 2008ஆம் ஆண்டு முதல் கோன் சோயா கலவை, சீனி வழங்கப்படாது அரிசி, பருப்பு, மரக்கறி எண்ணெய் மட்டும் வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன் பச்சை மரக்கறிக்காக தேச நிர்மாண தோட்ட உட்கட்டுமான அமைச்சினால் ஒரு மாணவனுக்கு ரூபா 2 வீதம் கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

மாணவர்களின் புரதச்சத்தினை அதிகரிக்கும் நோக்குடன் 2009ஆம் ஆண்டு முதலாம் தவணை முதல் ரின் மீன் வழங்குமாறு அமைச்சினால் அறிவிக்கப்பட்டதற்கு அமைய வலயக் கல்விப் பணிமனை ஊடாக ரின்மீன் பெற்றுக்கொள்ள விருப்பமுள்ள பாடசாலைகளின் கோரிக்கையைப் பெற்று அவர்களுக்கு 60 வீதம் ரின்மீனும், 40 வீதம் பருப்பும் வழங்கப்பட்டன.

ரின்மீன் வழங்க விருப்பம் தெரிவிக்காத பாடசாலைகளுக்கு மாணவர்களின் புரதச் சத்தில் மாற்றம் ஏற்படாதவாறு 100 வீதம் பருப்பு வழங்கப்பட்டது. ரின்மீன் வழங்கவேண்டும் என எந்தவொரு நிர்ப்பந்தம் வழங்கப்படாது விருப்பத்தின் அடிப்படையில் மட்டுமே வழங்கப்பட்டது என்பதனை அறியத்தருகின்றேன் - என்றார்.

(202)




நல்லூர் லயன்ஸ் கழகம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரண உதவியை வழங்கியுள்ளது. லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் நிவாரணப் பொருள்களைப் பயனாளி ஒருவருக்கு வழங்குவதைப் படத்தில் காணலாம்.

# பாடசாலைகளின் மெய்வன்மைப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.12

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் எஸ்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு யாழ்.பல்கலைக்கழக கணித, புள்ளிவிவரவியல் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.சிறிசற்குணராஜா, அவரது பாரியார் யாழ்.பல்கலைக்கழக மொழியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி.சிவராணி சிறிசற்குணராஜா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்கள். (202-236)

* * *

சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலய வருடாந்த மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி வித்தியாலய மைதானத்தில் அதிபர் ரி.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.வலய ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினராகப் புனித யாகப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட்தந்தை ஆர்.எக்ஸ்.நேசராஜா அடிகளார் கலந்துகொள்வார். (201)

* * *

நாவாந்துறை றோ.க.வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சென். நிக்கலஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சாரண மாவட்ட ஆணையாளரும் ஓய்வுபெற்ற அதிபருமான ஜி.செபஸ்தியாம்பிள்ளை கலந்துகொள்வார். சிறப்பு விருந்தினர்களாக நாவாந்துறை பங்குத்தந்தை அருட்தந்தை எம்.ஆர்.வி.இரவிச்சந்திரன், அருட்சகோதரி புனிதராணி ஆகியோர் கலந்துகொள்வர். (201)

* * *

இணுவில்,பெப்.12

இணுவில் இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி மைதானத்தில் கடமை நிறைவேற்று அதிபர் சி.சோதிலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.நடராஜா, சிறப்பு விருந்தினராகக் கிராம அலுவலர் (J/188) எஸ்.பிரபாகரன் ஆகியோர் கலந்துகொள்வர். (201-55)


141ஆம் நாள் நினைவுத்துளிகளும் 25ஆம் ஆண்டு

திருமண நாள் நினைவும்

அமரர் கணபதிப்பிள்ளை குலசேகரம்

(முன்னாள் கிராமசேவையாளர்)

தோற்றம்: 05.05.1952

மறைவு: 25.09.2008

திதி: திருதியை



அன்பும் பண்பும் மிக்க அப்பாவே...!
எம்மைத் தவிக்க விட்டு மனம்போல் மரணம் வந்ததே அப்பா!
இந்த ஜென்மத்தில் அப்பா என்று கூப்பிட நீங்களில்லாத
அநாதைகளாய் விட்டோம் அப்பா, பாசமுடன் அம்மாவையும்
செல்வப் பிள்ளைகளையும் நோகவிடாமல் வளர்த்தீர்கள் அப்பா!
இப்போது நொந்து புளுங்கி அப்பா இல்லாத அநாதைகளாய்
புலம்பித் தவிக்கின்றோம் அப்பா...!

என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாடும்:
மனைவி,
பிள்ளைகள்.

கல்லூரி வீதி,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு எதிரான பிரசாரத்தை ஐ.தே.கவும் முன்னெடுக்கவேண்டும்

## அரசுத் தரப்பில் அழைப்பு

கொழும்பு, பெப். 12

பயங்கரவாதத்துக்கு எதிரான பிரசாரத்தை சர்வதேச மட்டத்தில் முன்னெ டுக்க ஏனைய தரப்புகள் போன்று ஐக்கிய தேசி யக் கட்சியும் முன்வரவேண்டும் என்று அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனவே இந்த வேண்டுகோளை விடுத்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

புலிகளின் பிடியில் இருந்து மக்கள் பெரும் எண்ணிக்கையில் வர ஆரம்பித்துள்ளனர். இதுவரை 32 ஆயிரத்து 596 பேர் முல்லைத்தீவு பாதுகாப்பு வலயத்துக்கு வந்துள்ளனர்.

இன்னும் ஓரிரு தினங்களில் சுமார் 50 ஆயிரம் அல்லது 60 ஆயிரம் மக்கள் வவுனியாவுக்கு வருவர் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்.

ஆனால், அவ்வாறு வருகின்ற மக்களை வரவிடாமல் தடுக்கும் நடவடிக்கையில் புலிகள் ஈடுபட்டுள்ளனர். இடம்பெயர்ந்து வந்துகொண்டிருந்த மக்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலை நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இத்தாக்குதலை ஐ.நாவும் மிக வன்மையாகக் கண்டித்தது. அதற்காக நாம் ஐ.நாவுக்கு நன்றி கூறுகின்றோம். உலக நாடுகளே இந்த தாக்குதலைக் கண்டிக்கும்போது ஐக்கிய தேசியக் கட்சி மாத்திரம் மௌனமாக இருக்கின்றது.

### தாக்குதல்கள் மக்களுக்கு எதிரானவை அல்ல

அந்தக் கட்சியும் அரசுடன் இணைந்து பயங்கரவாதத்திற்கு எதிரான பிரச்சாரத்தை சர்வதேச மட்டத்தில் கொண்டு சென்றால், இந்நாட்டுக்குப் பெரும் உதவியாகவிருக்கும்.

நாம் பயங்கரவாதிகளையும், மக்களையும் தெளிவாக இனங் கண்டுள்ளோம். எமது தாக்குதல் பயங்கரவாதிகளுக்கு எதிரானதே தவிர, அப்பாவி மக்களுக்கு எதிரானதல்ல.

புலிகள் முல்லைத்தீவில் மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துவதனாலேயே அம்மக்களை வெளியேற விடாமல் தடுத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்துகின்றனர்.

அந்த நிலையிலும் நாம் வன்னி மக்களை கைவிடமாட்டோம். இடம்பெயர்ந்துவரும் மக்கள் அனைவரையும் நாம் நல்லபடியாக கவனித்து வருகிறோம் - என்றார்.

# புதுமாத்தளன் வைத்தியசாலை மீது படையினர் தாக்கவில்லையாம்

கொழும்பு, பெப்.12

கடந்த திங்கட்கிழமை புதுமாத்தளன் வைத்தியசாலை மீது மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலில் 16 நோயாளார்கள் உயிரிழந்தனர்.

அத்தாக்குதலை படையினர் மேற்கொள்ளவில்லை என்று இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

இராணுவம் அப்பகுதியை நோக்கித் தாக்குதல் நடத்தவில்லை என்றும் விடுதலைப் புலிகளே பீரங்கித் தாக்குதலை நடத்தியுள்ளார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகள் மக்களைத் தொடர்ந்தும் தடுத்து வருகின்றனர். நாம் செஞ்சிலுவைச்சர்வதேசக் குழு ஊடாக கப்பல் மூலம் திருகோணமலைக்கு நோயாளர்களை அழைத்து வர ஒத்துழைப்பு வழங்கினோம்" என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

# வன்னி மக்களைக் காப்பாற்றுமாறு கோரி யாழ்.பல்கலையில் மௌனப் பிரார்த்தனை

கொழும்பு, பெப்.12

வன்னியில் உள்ள மக்கள் எதிர்கொண்டுள்ள பேரவலத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுமாறு வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் மௌனப்பிரார்த்தனை நடைபெற்றது.

யாழ்.பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலய மண்டபத்தில் இந்த மௌனப்பிரார்த்தனை நடைபெற்றது.

முற்பகல் 11 மணியளவில் ஆரம்ப மான மௌனப்பிரார்த்தனை 12.30 மணி வரை நீடித்தது.

இதில் பல்கலைக் கழகத்தின் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்வி சாரா ஊழியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இந்தப் பிரார்த்தனை தொடர்ந்தும் இன்று முற்பகல் 11 மணிமுதல் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறவுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (50-9)

# தொண்டர் ஆசிரியர்கள் 447 பேருக்கு இன்று முதல் வலய ரீதியாக நேர்முகத்தேர்வு

யாழ்ப்பாணம், பெப்.12

யாழ்.மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்கள் 447 பேர் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். இந்த நேர்முகப் பரீட்சை வலய ரீதியாக இன்று முதல் இடம் பெறவுள்ளது என்று சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சரும் வடமாகாணத்திற்கான விசேட செயலணியின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இந்தத் தேர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். வலயத்தில் இன்றும், வலிகாமம் வலயத்தில் நாளையும், தென்மராட்சி, வடமராட்சி வலயங்களில் எதிர்வரும் 14 ஆம் திகதியும் தீவக வலயத்தில் எதிர்வரும் 16 ஆம் திகதியும் நேர்முகத்தேர்வு இடம் பெறும்.

ஏற்கனவே நேர் முகத்தேர்வுக்கு சமுகமளிக்காத 42 பேருக்கும் இன்று யாழ். வலயத்தில் நேர்முகத் தேர்வு இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (7)

# இந்தியாவிலுள்ள சக்திகளின் உதவியின்றி மும்பைத் தாக்குதல் நடந்திருக்க முடியாது

## பாக். செய்தித்தாள் தகவல்

இஸ்லாமாபாத், பெப். 12

இந்தியாவிலுள்ள சக்திகளின் உதவியின்றி மும்பைத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பில்லை என்று இந்தியாவுக்கு அனுப்பியுள்ள விசாரணை அறிக்கையில் பாகிஸ்தான் கூற வுள்ளதாம்.

மும்பைத் தாக்குதலில் பாகிஸ்தான் தீவிர வாதிகளுக்குள்ள தொடர்பை இந்தியா அம்பலப்படுத்தியது. தாக்குதலின்போது உயிருடன் பிடிபட்ட ஒரே குற்றவாளியான அஜ்மல் கசாப் மற்றும் கொமாண்டோ படையினரால் கொல்லப்பட்ட 9 தீவிரவாதிகள் பற்றியும் விசாரணை நடத்தும்படி பாகிஸ்தானை கேட்டுக்கொண்ட இந்தியா அதற்கான ஆதாரங்களை அனுப்பி வைத்தது.

அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளின் வற்புறுத்தலுக்குப் பின்னர் இந்த ஆதாரங்களின் மீது பாகிஸ்தான் விசாரணை நடத்தியது. அண்மையில் முதல்கட்ட விசாரணையை முடித்து அதுபற்றிய அறிக்கையையும் தயார் செய்தது. இந்த அறிக்கையை கடந்த திங்களன்று பிரதமர் கிலானி தலைமையில் நடந்த அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இந்த அறிக்கையை ஓரிரு நாட்களில் இந்திய அரசுக்கு பாகிஸ்தான் அனுப்பி வைக்கும். விசாரணை அறிக்கை குறித்து பாகிஸ்தான் அரசு அதிகாரபூர்வமாக தகவல் எதையும் வெளியிடவில்லை.

எனினும், அந்நாட்டிலிருந்து வெளிவரும் 'டான்' செய்தித்தாள் இது குறித்து தகவல் வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்தனர் எனக் கூறி அது வெளியிட்டுள்ள தகவல்கள் வருமாறு:-

மும்பைத் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் குறித்து இந்தியா அளித்துள்ள ஆதாரங்களின் படி பாகிஸ்தான் பாதுகாப்பு அமைப்புகள் விசாரணை நடத்தின. இதில் இந்திய உள்நாட்டு சக்திகளின் உதவியின்றி மும்பைத் தாக்குதல் நடந்திருக்க வாய்ப்பில்லை என்ற சந்தேகம் எழுகிறது.

மேலும் ஜெயிலிலுள்ள அஜ்மல் கசாப் மற்றும் தாக்குதலின்போது சுட்டுக் கொல்லப்பட்டவர்களின் டி.என்.ஏ. சோதனைகளை எங்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும். அப்போதுதான் அவர்களது குடும்பத்தினர் இங்கு யாராவது இருந்தால் அவர்களுடன், அவை ஒத்துப் போகின்றனவா? என்பதை சரிபார்க்க முடியும்.

தவிர, தாக்குதல் நடத்தியவர்கள் பயன்படுத்திய ஆயுதங்கள், மொபைல் போன்கள் இந்திய புலனாய்வு அமைப்புகளால் பதிவு செய்யப்பட்ட போன் ஆதாரங்கள் பற்றிய தகவல்களும் எங்களுக்கு தேவை. இதேபோல் இணையத்தளத்தின் மூலம் அவர்கள் பயன்படுத்திய மின்னஞ்சல் முகவரிகள் பற்றிய விவரங்களும் வேண்டும்.

இதேபோல் தாக்குதல் நடத்தியவர்கள், இந்திய கடல் வழியாக மும்பைக்குள் சட்ட விரோதமாக நுழைவதற்கு முன்பாக கடலில் கொல்லப்பட்டனர் எனக் கூறப்படும் இந்தியர்கள் பற்றிய தகவலும் தேவைப்படுகிறது.

தாக்குதல் தொடர்பாக இந்தியா தந்த ஆதாரங்கள் போதுமானதாக இல்லை. ஆதாரங்கள் உறுதியாக இருந்தால்தான், தாக்குதல் நடத்தியவர்கள் சட்டத்திற்கு முன்பாக கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க முடியும்.

மேற்கண்டவாறு பதில் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே இந்தியா அனுப்பிய ஆதாரங்களின் அடிப்படையில் பாகிஸ்தான் முதல் தகவல் அறிக்கையை இன்னும் இரண்டு நாள்களில் பதிவு செய்யும் என்று கூறப்படுகிறது. இந்தத் தகவலும் பாகிஸ்தான் அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு இருப்பதாக 'டான்' செய்தி வெளியிட்டுள்ளது.

இதனிடையே, மும்பைத் தாக்குதல் பற்றி விசாரணை நடத்திய மும்பை குற்றப் பிரிவு அதிகாரிகள் விசாரணை குறித்த தகவல்களை அமெரிக்க புலனாய்வுத் துறையினருடன் பகிர்ந்துகொள்வதற்காக கடந்த திங்களன்று இரவு அமெரிக்கா பயணமானார்கள்.

# ஆப்கானில் தற்கொலைத் தாக்குதல் 17 பேர் உயிரிழப்பு; 46 பேர் காயம்


நாக்குதல் நடைபெற்றபோது.....

கொழும்பு,பெப்.12

ஆப்கானிஸ்தான் காபூல் நகரத்தில் அமைந்துள்ள நீதி அமைச்சின் கட்டடப்பகுதியில் நேற்று மேற் கொள்ளப்பட்ட தற்கொலைத் தாக்குதலில் 17 பேர் உயிரிழந்தனர். 46 பேர் வரை படுகாயமடைந்தனர்.

இத்தாக்குதல் சிறைச்சாலை ஆணையாளரினது அலுவலகத்திற் குள்ளேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் திடீரென அக்கட்டடத் தொகுதியினுள் பிரவேசித்த இரு தற்கொலைத் தாரிகளும் மூன்று ஆயுதாரிகளும் இத்தாக்குதலை நடத்தினார்கள்.

ஆயுததாரிகள் அமைச்சகத்துள் பரவலாக துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபோது அவர்கள் ஆப்கான் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அந்த கட்டடத்தை ஆப்கான் இராணுவத்தினர் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தினர்.

நீதி அமைச்சைச் சுற்றி காவல் கடமையில் இருந்த சமயம் ஆயுததாரிகள் எவ்வாறு உள்நுழைந்தனர் என்பது தெரிய வில்லை என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை ஆப்கானில் இருவேறு கட்டங்கள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

# மக்களுக்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடையார்கட்டு, சுதந்திரபுரம் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் நுழைந்த இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டிருந்தனர் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார். குறித்த இணையத்தளச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

உடையார்கட்டு சுதந்திரபுரம் பகுதிகளில் உள்ள பாதுகாப்பு வலயங்களுக்குள் நுழைந்த இராணுவத்தின் சிறப்புப் படைப் பிரிவினர் மக்களைப் பலவந்தமாகத் தமது பகுதிகளுக்குள் கொண்டு செல்வதற்காக மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் கொல்லப்பட்டனர். மேலும் பலர் காயமடைந்தனர்.

கடந்த நான்கு வாரங்களாக ஆயிரக்கணக்கான பொதுமக்களைக் கொன்றுள்ள இலங்கை இராணு வம் தற்போது தன் மீது சர்வதேசசமூகம் கொடுத்து வரும் அழுத்தத்தை திசை திருப் புவதற்காக பிரசார நடவடிக்கை களில் ஈடுபட்டுள்ளது.

வன்னி மக்கள் வாழும் இடத்தி லேயே சர்வதேச சமூகத்தின் உத்தர வாதத்துடன் பாது காப்பு வலயங்கள் அமைக்கப்பட வேண்டும் - என்று தெரிவித்தார். (அ-சி)

# நோயாளர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோயாளர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு வழங்கப்படாமை குறித்து தாங்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர் என்று செஞ்சிலுவை சர்வதேச குழுவின் இலங்கைப் பிரதிநிதிகளின் தலைவர் போல் கஸ்டெலா தெரிவித்துள்ளார்.

சர்வதேச மனிதாபிமான சட்டங்களின் கீழ் தமக்குள்ள கடப்பாடுகளை நிறைவேற்றுமாறும், நோயாளர்கள், மருத்துவப் பணியாளர்கள், மருத்துவ நிலையங்கள் என்பவற்றை விட்டுவிடுமாறும் மீண்டுமொருமுறை இரு தரப்பையும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்.-

வன்னியில் இருந்து காயமடைந்தவர்களையும் நோயாளர்களையும் தொடர்ந் தும் வெளியேற்றுவது குறித்து இரு தரப்புடனும் செஞ்சிலுவைக் குழு பேச்சுக்களை மேற்கொண்டுள்ளது.-

வன்னியில் மருத்துவ நிலையங்கள் இயங்கவில்லை. சில தற்காலிக மருத்துவமனைகள் உள்ளன. எனினும் அதிகரித்துச் செல்லும் நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்க முடியாது.-

இதன் காரணமாக மருத்துவத் தேவைகளுக்காக மக்களை வெளியேற்றுவது தொடர வேண்டும் - என்றும் அவர் கூறினார். (அ-சி)

# தலாய்லாமாவுக்கு விருது கொடுப்பதா? இத்தாலி நாட்டின்மீது சீனா கோபம்


திபெத் ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவுக்கு விருது வழங்கப்பட்டபோது......

திபெத்திய புத்த மதத் தலைவர் தலாய் லாமா இத்தாலி நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார். அவருக்கு அந்த நாட்டுத் தலைவர்கள் விருது வழங்கி கௌரவித்தனர். இது சீனாவுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளது. பயங்கர விளைவுகள் ஏற்படும் என்று இத்தாலி அதிகாரிகளை சீனா எச்சரித்துள்ளது.

இத்தாலியின் இந்தச் செயல், சீன மக்களின் உணர்வை புண்படுத்துவதாக உள்ளது என சீன அதிகாரி ஜியாங் தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில், "சீனாவின் கவலைகளுக்கு இத்தாலி கவனம் செலுத்தும் என்று நாங்கள் நம்பு கின்றோம்" என்று தெரிவித்தார்.

திபெத் சீனாவின் ஒரு அங்கம் என்றும், அதற்கு விடுதலை கோரும் தலாய்லாமாவை கௌரவிப்பது சீனாவுக்கு எதிரானது என்றும் அந்த நாட்டு அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

ஏற்கனவே, பிரான்ஸ் அதிபர் சர்கோசி தலாய்லாமாவை சந்தித்ததற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்தமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் நிறுத்தம் கோரி 17 ஆம் திகதி சென்னையில் மனிதச்சங்கிலிப் போர்

## இலங்கைப் பாதுகாப்பு இயக்கம் அறிவிப்பு



சென்னை, பெப். 12

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்கக் கோரியும், போர் நிறுத்தத்தை வலியுறுத்தியும் எதிர்வரும் 17ஆம் திகதி சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை மனிதச் சங்கிலிப் போராட்டம் நடத்தப்படும் - என்று இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் பழ.நெடுமாறன் அறிவித்துள்ளார்.

இலங்கையில் நடைபெறும் தமிழினப் படுகொலையைத் தடுக்கத் தவறிய மத்திய அரசை கண்டித்து இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் நேற்று முன்தினம் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அப்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் உட்பட தமிழின உணர்வாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு -

ஈழத்தமிழர்களை காக்கக்கோரி எதிர் வரும் 17ஆம் திகதி சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை மனிதச்சங்கிலி நடத்துவது.

மதுரையில் 24ஆம் திகதியும், கோவை, திருச்சி, பாண்டி, சேலம், தூத்துக்குடியில் 19ஆம் திகதியும் மக்கள்திரள் பேரணி நடத்துவது.

ஈழத்தமிழர்களின் அவலநிலை குறித்து வெளிநாட்டுத் தூதர்களைச் சந்தித்து மனுக் கொடுப்பது.

ஐ.நா. பொதுச்செயலாளருக்கு மின்னஞ்சல் அனுப்புவது.

ஈழத்தமிழருக்காக தீக்குளித்த முத்துக்குமாரின் மரண சாசனத்தை பல லட்சம் பிரதிகள் எடுத்தும், சி.டி.யில் பதிவு செய்து தமிழகம் முழுவதும் மக்களுக்கு விநியோகம் செய்வது போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தின் முடிவில் பேசிய இயக்கத் தலைவர்கள், தமிழக மக்கள் அனைவரும் போராட்டத்தில் கலந்துகொண்டு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவான கோஷங்களை எழுப்பி ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டனர். மேலும் தீக்குளிப்பு போன்ற சம்பவங்களில் ஈடுபடவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டனர்.

# இலங்கை விவகாரம் குறித்து அறிக்கை வெளியிட வேண்டும்

## மனிதநேய மக்கள் கட்சி வலியுறுத்து

சென்னை, பெப். 12

இலங்கைப் பிரச்சினை குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் - என்று மனிதநேய மக்கள்கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலர் ப.அப்துல் சமது செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கை வருமாறு -

இலங்கையில் போர் என்ற பெயரால் சிங்கள இராணுவம் அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிப்பது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. இப்பிரச்சினையில் மத்திய அரசு இதுவரை காட்டி வந்த மெத்தனத்தை மனிதநேய மக்கள்கட்சி கண்டிக்கிறது.

இலங்கைத் தமிழர்களின் வாழ்வுரிமையைக் காக்க மத்திய அரசு இதுவரை உறுதியான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்பதே தமிழ் மக்களின் உணர்வாக உள்ளது. அமெரிக்காவுடனான அணுசக்தி உடன்பாட்டில் காட்டிய அக்கறையை லட்சக்கணக்கான தமிழர்களின் உயிரைக் காக்கும் விடயத்தில் மத்திய அரசு காட்டவில்லை - என்றுள்ளது.

# கருணாநிதி போர் நிறுத்தத்தை ஏற்படுத்தினால் ஆயுள் முழுவதும் முதல்வராக இருக்க எமது ஆதரவு

## தா.பாண்டியன் உறுதி



சென்னை,பெப்.12

இலங்கையில் ஓரிரு நாளில் போரை நிறுத்த, மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறு கருணாநிதி வற்புறுத்த வேண்டும். போரை நிறுத்தினால், இன்னும் இரண்டரை ஆண்டுகள் மட்டுமல்ல, ஆயுள் உள்ள வரை அவரே முதல்வராக நீடிக்க பா.ம.க. உட்பட நாங்கள் அனைவரும் ஆதரவு அளிக்கிறோம் - என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் தா. பாண்டியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கப் பொதுக்கூட்டத்தில் அவர் பேசியவை வருமாறு -

மதுரையில் இந்திரா காந்தி மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது, அடியை எல்லாம் தன் மீது வாங்கிக் கொண்டு, இந்திராவைக் காப்பாற்றியவர் பழ. நெடுமாறன். அதேபோல் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது, அவருடன் குண்டடிபட்டவன் நான். அப்போது ஒரு காங்கிரஸ் கட்சியினர் கூட அருகில் இல்லை. எனவே அப்படிப்பட்ட காங்கிரஸ் கட்சியினருக்கு எங்கள் தேசபக்தி குறித்து சந்தேகம் எழுப்ப எந்தத் தகுதியும் இல்லை.

இலங்கையில் போர் நிறுத்தப்பட வேண்டும். தமிழர்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுவது தடுக்கப்பட வேண்டும் என்பதே நமது நோக்கம். மருத்துவமனையில் சிகிச்சை பெறும் கருணாநிதி விரைவிலேயே குணமடைந்து, வீடு திரும்ப வேண்டும். இலங்கை யில் ஓரிரு நாளில் போரை நிறுத்த, மத்திய அரசு நடவடிக்கை எடுக்குமாறு அவர் வற் புறுத்த வேண்டும். போரை நிறுத்தினால், இன்னும் இரண்டரை ஆண்டுகள் மட்டுமல்ல; ஆயுள் உள்ள வரை அவரே முதல்வராக நீடிக்க பா.ம.க. உட்பட நாங்கள் அனைவரும் ஆதரவு அளிக்கிறோம் - என்றார்.

## போர் நிறுத்தம் கோரி 18 ஆம் திகதி வரை சட்டத்தரணிகள் பணிப்புறக்கணிப்பு

எதிர்வரும் 18ஆம் திகதி வரை மீண்டும் நீதி மன்றுகளைப் புறக்கணிக்க உயர்நீதிமன்ற சட் டத்தரணிகள் சங்கம் தீர்மானம் நிறைவேற் றியுள்ளது.

இலங்கைப் தமிழர் படுகொலையை தடுத்து நிறுத்தவும், போர் நிறுத்தம் வேண்டியும் நீதிமன்றங்களைப் புறக்கணிக்க சென்னை உயர்நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் கடந்த 29ஆம் திகதி முடிவு எடுத்தது. இதைத் தொடர்ந்து கடந்த திங்கள் வரை சட்டத் தரணிகள் நீதிமன்றுகளைப் புறக்கணித்துப் போராட்டம் நடத்தினர். இதனால் நீதிமன்றுகளில் 7 நாள்கள் வழக்கு விசாரணை பெரிதும் பாதித்தது.

பின்னர் நேற்றுமுன்தினம் மட்டும் போராட்டத்தை கைவிட்டு சட்டத்தரணிகள் வழக்கப்படி நீதிமன்றில் ஆஜரானார்கள்.

பெரும்பாலான சட்டத்தரணிகள் நீதிமன்றங்களைத் தொடர்ந்து புறக்கணிக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தனர். இதனால் நேற்றுமுன்தினம் மாலையில் உயர் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கக் கூட்டம் சங்கத் தலைவர் ஆர்.சி.பால்கனகராஜ் தலைமையில் நடைபெற்றது.

இலங்கைத் தமிழர்கள் படுகொலையை உடனடியாகத் தடுத்து நிறுத்த மத்திய அரசு தலையிடக்கோரி மாநில அளவில் 11ஆம் திகதி (நேற்று) முதல் 18ஆம் திகதிவரை நீதிமன்றப் புறக்கணிப்பு நடத்தப்படும் என ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

# இலங்கையில் போர் நிறுத்தமே முக்கியம்: ஆட்சியைக் கவிழ்ப்பது நம் நோக்கமல்ல!

## ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை, பெப்.12

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட வேண்டும் என்பதே முக்கியம். தி.மு.க. ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல - என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் போர் நிறுத்தம் கோரி இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கம் சார்பில் சென்னையில் செவ்வாய்க்கிழமை நடந்த பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசியபோதே அவர் இதைத் தெரிவித்தார். மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

அடுத்து நடைபெறவுள்ள ஐ.நா. பாதுகாப்பு சபைக் கூட்டத்தில் இலங்கைப் பிரச்சினை குறித்து விவாதிப்பதற்கான ஏற்பாட்டை ஜப்பான் செய்துள்ளது.

அதேபோல் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்ஸில் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினை விவாதத்துக்கு வரவுள்ளது. இலங்கைப் பிரச்சினையில் சமாதானத் தூதராகப் பணியாற்றத் தயார் என கிழக்கு தைமூர் ஜனாதிபதி அறிவித்துள்ளார். இவையெல்லாம் மகிழ்ச்சியைத் தரும் செய்திகள்.

இந்த நேரத்தில் விடுதலைப் புலிகளை ஒழிப்பதற்கான போரில் இந்திய அரசின் ஒத்துழைப்பும், உதவிகளும் பெரும் திருப்தியைத் தருகிறது என இலங்கை ஜனாதிபதி வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார். இதிலிருந்து இந்திய அரசின் துரோகம் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவுக்கு இலங்கை அரசால் பல ஆபத்துகள் வரவுள்ளன. மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கான சதித் திட்டமே இலங்கையில்தான் தீட்டப்பட்டது என நாங்கள் சந்தேகிக்கிறோம்.

இலங்கைப் பிரச்சினையால் ஆட்சி கவிழ்ந்துவிடும் என முதல்வர் பயப்பட வேண்டாம். இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் என்பதே எங்கள் நிலை. தி.மு.க.வின் ஆட்சியைக் கவிழ்ப்பது எங்கள் நோக்கமல்ல.

ஒருவேளை இலங்கைப் பிரச்சினைக்காக தி.மு.க. ஆட்சி கவிழும் சூழல் ஏற்பட்டால் எங்கள் கட்சியின் 18 எம்.எல்.ஏக்களும் தி.மு.க. ஆட்சியைக் காப்பாற்றுவார்கள் - என்றார்.

# இந்தியாவின் தமிழினத் துரோகத்தை எதிர்த்து இளைஞர்கள் ஆயுதத்தோடு கடல் தாண்டுவர்..!

## எச்சரிக்கை விடுக்கிறார் வைகோ

சென்னை, பெப். 12

இந்திய அரசின் தமிழின துரோகத்தை தமிழக மக்கள் மன்னிக்கவே மாட்டார்கள். இனி வரும் இளைஞர்கள் எங்களைப் போன்று சும்மா இருக்கமாட்டார்கள். அவர்கள் ஈழத் தமிழருக்காக கடல்வழியாக ஆயுதங்களோடு புறப்படுவார்கள். அப்படி ஆயுதம் ஏந்தும் சூழ்நிலை வந்தால் நான் முதல் ஆளாக நிற்பேன்.

- இவ்வாறு ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இலங்கைத்தமிழர் பாதுகாப்பு இயக்கப் பொதுக்கூட்டத்தில் பேசியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவித்தவை வருமாறு -

இலங்கையில் போர் நிறுத்தம் செய்யப்பட வேண்டும் என ஐ.நா. சபை மற்றும் அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், பிரான்ஸ், நோர்வே



போன்ற பல நாடுகள் வற்புறுத்தியுள்ளன.

ஆனால், போர் நிறுத்தம் வேண்டும் என இந்திய அரசு ஒரு வார்த்தை கூடச் சொல்ல மறுக்கிறது. காரணம் இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராகப் போரை நடத்திக் கொண்டிருப்பதே இந்திய அரசுதான்.

விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை அறிவித்தபோது கப்பல், கப்பலாக ஆயுதங்களை இலங்கை அரசு இறக்குமதி செய்தது. ஆனால் இங்கிருந்து என் சகோதரர்களுக்கு 10 லீற்றர் டீசல் போய் விட்டால் கடத்தல் என்கிறார்கள். இனிவரும் இளைஞர்கள் எங்களைப் போன்று இருக்கமாட்டார்கள்.

இனிவரும் இந்நாட்டு இளைஞர்கள் கடல் வழியாக ஆயுதங்களோடு புறப்படுவார்கள். அப்படி ஆயுதம் ஏந்தும் சூழ்நிலை வந்தால் நான் முதல் ஆளாக நிற்பேன். உன் பாதுகாப்பு சட்டம் கால் தூசிக்கு சமம். மாணவர்களே வீதிக்கு வாருங்கள், கிளர்ச்சி பரவட்டும், தமிழகம் கொந்தளிக்கட்டும். இந்திய ஒருமைப்பாடு சிதறிவிடும் என்ற பயம் இந்திய அரசுக்கு வரட்டும். என்னுடைய இந்த நிலைப்பாட்டால் அரசியல் வாழ்க்கை பாதிக்கப்பட்டாலும் பிரச்சினை இல்லை. - என்றார்.

# இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக தி.மு.க. மேடையில் காங்கிரஸாருக்கு அவமதிப்பு

மதுரை, பெப். 12

மதுரையில் தி.மு.க. சார்பில், இலங்கைத் தமிழர் பாதுகாப்புப் பேரவை நடத்திய பொதுக் கூட்டத்தில் காங்கிரஸார் அவமதிக்கப்பட்டனர் என்று அக் கட்சியினர் வருத்தம் தெரிவித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக, தி.மு.க. சார்பில் இலங்கைத் தமிழர் நல உரிமைப் பேரவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் சார்பில், மதுரையில் கடந்த திங்கட்கிழமை மாலை பேரணி, பொதுக்கூட்டம் நடைபெற்றது.

மேலமாசி வீதி -வடக்குமாசி வீதியிலிருந்து புறப்பட்ட இப் பேரணியில், தி.மு.க., காங்கிரஸ், திராவிடர் கழகப் பிரமுகர்கள், எம்.எல்.ஏ.க்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

தி.மு.க. பிரமுகர் இசக்கிமுத்து, இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஒவ்வொரு கட்சிக்கும் உள்ள கருத்தை ஒரேமாதிரி வெளிப்படுத்த வேண்டும் என சமரசம் செய்தார்.

இதையடுத்து, மாநிலங்களவை உறுப்பினரும், காங்கிரஸ் செய்தித் தொடர்பாளருமான ஞானதேசிகன் பேசுகையில், இலங்கைப் பிரச்சினை சிக்கலானதற்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும், தமிழர் தலைவர்களையே புலிகள் கொன்றவர்கள் என்றும் தாக்கிப் பேசினார்.

அப்போது கூட்டத்திலிருந்த பீபி குளத்தைச் சேர்ந்த தி.மு.க. தொண்டர் எழுந்து, ஞானதேசிகனை வசைபாடி எச்சரித்தார். இதையடுத்து, கூட்டத்தில் பரபரப்பு ஏற் பட்டது.

தொடர்ந்து வசைபாடிய தி.மு.க. தொண்டரை நோக்கி காங்கிரஸார் ஓடினர். இதையடுத்து, தி.மு.க.வினரும் எழுந்து அந்தத் தி.மு.க. தொண்டரை அப்புறப்படுத்தினர்.

இதைக் கண்ட ஞானதேசிகன், எதற்கும் பயப்படமாட்டேன் எனத் தொடர்ந்து பேசினார். உடனே, தி.மு.க. பிரமுகர்கள் அவரைச் சமாதானம் செய்தனர்.

மேடை நாகரிகத்துடன் பேசுமாறு ஞானதேசிகனை சிலர் கேட்டுக்கொண்டனர். இதையடுத்து, அவர் பேச்சை நிறைவு செய்தார்.

இச் சம்பவத்தையடுத்து, கூட்டத்துக்கு வந்திருந்த காங்கிரஸார் வெறியேறினர். தாங்கள் அவமதிக்கப்பட்டனர் என காங்கிரஸ் பிரமுகர்கள் சிலர் வருத்தம் தெரிவித்தனர்.

தி.மு.க. தரப்பில் கேட்டபோது, இக் கூட்டத்துக்கு காங்கிரஸாரை அழைத்ததே தவறு என்பதுபோல அவர்கள் நடந்துகொண்டனர். இதுபற்றி எங்கள் மேலிடத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளோம் - என்றனர்.

# இலங்கையில் போர் நிறுத்தம் வேண்டும் இதுவே சகல கட்சிகளினதும் நிலைப்பாடு

## இப்படிக் கூறுகிறார் அன்புமணி ராமதாஸ்

வேலூர், பெப். 12

இலங்கையில்போர் நிறுத்தத்தை ஏற்படுத்துவதற்கு உலகத் தமிழர்கள் ஒரே அணியில் நிற்கவேண்டும். அங்கு போர் நிறுத்தப்பட வேண்டும். இதுதான் அனைத்துக் கட்சிகளின் நிலை - என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

மேலும், அ.தி.மு.க. கூட்டணியில் சேருவதற்காக தி.மு.கவை நாங்கள் குற்றம் சாட்டவில்லை. நாங்கள் எந்த அணியிலும் இல்லை - என்றும் அவர் கூறியுள்ளார்.

வேலூர் மாவட்ட பா.ம.க. பொதுக்குழுக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேலூருக்கு செவ்வாய்க்கிழமை வந்த அவர் செய்தியாளர்களிடம் கூறியபோதே இதனைத் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் இருந்து மேலும் 250 நோயாளர்கள் இன்று கப்பல் மூலம் திருமலைக்கு அழைத்துவர ஏற்பாடு

திருகோணமலை, பெப்.12

வன்னியில் இருந்து இரண்டாவது தொகுதியாக காயமடைந்த 250பேரை இன்று கப்பல் மூலம் திருகோணமலைக்கு அழைத்து வர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட காயமடைந்த 297 பேரும் அவர்களது பாதுகாவலர்களாக அழைத்துவரப்பட்ட 71 பேரும் நேற்று அதிகாலை திருகோணமலையை வந்தடைந்தனர்.

திருகோணமலை வைத்தியசாலைக்கு பின்புறமாக மனையாவெளி என்னும் இடத்தில் உள்ள இறங்குதுறையில் இறக்கப்பட்ட அவர்கள் உடனடியாக சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர்.

அவர்களைப் பார்வையிட எவரும் அனுமதிக்கப்படவில்லை. அவர்களின் விவரங்கள் மற்றும் படங்கள் கொண்ட பட்டியல் வைத்தியசாலை விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

பெரும் எண்ணிக்கையானவர்கள் அந்தப் பட்டியலை நேற்றுப்பார்வையிட்டனர்.

திருகோணமலை வைத்தியசாலை வைத்தியர்களுடன் இணைந்து பணியாற்ற கொழும்பு, மட்டக்களப்பு வைத்திசாலைகளில் இருந்து இன்று வைத்தியர்கள் வரவிருக்கின்றனர்.

வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ள இடநெருக்கடி காரணமாக வைத்தியசாலைக்கு அருகில் உள்ள பாடசாலையில் நோயாளர்களை தங்கவைத்து சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வைத்தியசாலைக்கு வரும் வழியில், காயமடைந்திருந்த குழந்தை ஒன்று மரணமாகி விட்டதாக தெரிவிக்கப்பட்டது.

மேலும் நோயாளர்கள் வரும் பட்சத்தில் அவர்களுக்கு சிகிச்சை அளிக்க தயார் நிலையில் வைத்தியசாலை வைக்கப்பட்டுள்ளது. போதிய அளவு இரத்தம் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடும் காயங்களுக்குள்ளான மூவரை மேலதிக சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை -

கிழக்கு ஆளுநர், முதலமைச்சர், அதிகாரிகள் கலந்துகொண்ட அவசர கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம் பெற்றது.

காயமடைந்தவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பது என அங்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. (1-151)

## நெதர்லாந்தில் ஆர்ப்பாட்டம்

இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, தரைப்படைத் தளபதி சரத் பொன்சேகா ஆகியோரை உடன் கைது செய்து, போர்க்குற்றங்களுக்காக விசாரணை செய்யுமாறு வலியுறுத்தி நெதர்லாந்தில் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இக்கண்டன ஆர்ப்பாட்டம் நெதர்லாந்தின் 'த கேக்' நகரில் உள்ள அனைத்துலக போர்க் குற்றவியல் நீதிமன்றத்தின் முன்பாக எதிர்வரும் 18ஆம் திகதி (புதன்கிழமை) பிற்பகல் 1 மணி தொடக்கம் பி.ப. 3 மணிவரை இடம்பெறவுள்ளது.

இதில் பெருந்திரளாக மக்களை கலந்து கொள்ளுமாறும், நெதர்லாந்தில் உள்ள தமிழ் அமைப்புகள் இதற்கு ஆதரவு வழங்குமாறும் இந்த ஆர்ப்பாட்டத்தை ஒழுங்கு செய்துள்ள 'இக்காட்' அமைப்பினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## சாவகச்சேரி வைத்தியசாலையிலும் நேற்று அவசர மருத்துவ சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.12

சாவகச்சேரி வைத்தியசாலையில் அவசர மருத்துவ சேவையை அமெரிக்கப் பிரதித் தூதுவர் ஜேம்ஸ் ஆர்மூர் நேற்றுப் பிற்பகல் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தார்.

மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் தயாளன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் அம்பிகைபாகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

அத்துடன் 24மணிநேர அம்புலன்ஸ் சேவையும் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது அவசரமாக அம்புலன்ஸ் தேவைப்படுபவர்கள் 110 இலக்க தொலை பேசியுடன் தொடர்பு கொள்ளவும் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-131)

## புலிகளின் இரு அச்சகங்கள் கண்டுபிடிப்பாம்

வடக்கே முல்லைத்தீவு மாவட்டம் சுதந்திரபுரம் பகுதியில் இராணுவத்தினர் தமது நிலைகளைப் பலப்படுத்தும் அதே வேளை, அந்தப் பிரதேசத்தில் நடத்திய தேடுதலின்போது பெரிய அச்சு இயந்திரங்களுடன் கூடிய விடுதலைப்புலிகளின் அச்சகம் ஒன்றை கண்டுபிடித்துள்ளனர் என பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்திருக்கின்றது.

புதுக்குடியிருப்புக்குத் தெற்கே இன்னுமொரு அச்சகத்தையும் அச்சு இயந்திரத்துடன் கூடிய காகிதாதிகள் வெட்டும் இயந்திரத்தையும் படையினர் கைப்பற்றியுள்ளனர் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் பகுதிகளில் இராணுவத்தினரின் தேடுதல் நடவடிக்கைகள் தொடர்வதாகவும், இந்த அச்சகத்திற்கருகில் விடுதலைப் புலிகளின் கைக்குண்டு தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றையும் படையினர் கைப்பற்றியிருக்கின்றனர் எனவும் பாதுகாப்பு அமைச்சகம் கூறியிருக்கின்றது.


## கூறுவிலை கோரல்

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தால் கீழ்வரும் பொருளுக்கான பொருத்தமான வழங்குநர்களிடம் இருந்து கூறு விலை கோரப்படுகின்றது.

**Canopus DV Storm 2 Pro Capture Card**

எனவே பொருத்தமான வழங்குநர்கள் தங்கள் கூறுவிலைகளை 18.02.2009 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கீழ்க்குறிப்பிடப்படும் முகவரிக்கு மூடப்பட்ட கடித உறையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்கத்தின் மேல் மூலையில் ''கூறுவிலைகள்'' எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.



## பதவி வெற்றிடம்

கீழ்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இரு பாலாரிடமிருந்தும் கோரப்படுகின்றன.

பதவி 1 -திட்ட இணைப்பாளர்

பதவி 2 - திட்ட உத்தியோகத்தர்

**தகைமைகள் - பதவி -1**

1. விண்ணப்பதாரி 25-40 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சிறுவர் தொடர்பான திட்டங்களில் குறைந்தது 3 வருடகால அனுபவம் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களில் 3 வருட அனுபவம்
3. திட்டம் தொடர்பான அறிக்கையிடல், ஆவணப்படுத்தல், திட்ட முன்மொழிவு தயாரித்தல் ஆகியவற்றில் 3 வருட அனுபவம்.
4. ஆங்கில மொழியில் சிறந்த அறிவிருத்தல் வேண்டும்.(எழுத, வாசிக்க)
5. கணனி அறிவுடையவராக இருத்தல் வேண்டும்.
6. க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
7. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரமுடையவராக இருத்தல் வேண்டும்.
8. இலங்கையின் எந்த மாவட்டத்திலும் பணிபுரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

**தகைமைகள் - பதவி 2**

1. விண்ணப்பதாரி 20-40 வயதுக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. சிறுவர் தொடர்பான திட்டங்களில் குறைந்தது 2 வருடகால அனுபவம்.
3. மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப்பத்திரமுடையவராக இருத்தல் வேண்டும்.
4. க.பொ.த.(உ/த) பரீட்சையில் சித்தி.
5. இலங்கையின் எந்த மாவட்டத்திலும் பணிபுரியக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
6. கணனி அறிவுடையவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 14.02.2009 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்குள் கிடைக்கக்கூடியதாக 'மாவட்ட இணைப்பாளர், சர்வோதய மாவட்ட நிலையம், 3, பிளச்சர்ஸ் லேன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

அ.கி.சிவசுப்பிரமணியம்,
மாவட்ட இணைப்பாளர்.
11.02.2009


## முகாமைத்துவ பயிலுநர் பரீட்சை கொழும்பில் 16 இல் நடக்கும்

யாழ்ப்பாணம், பெப்.12

இலங்கை வங்கி முகாமைத்துவப் பயிலுநருக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களை எதிர்வரும் 16 ஆம் திகதி பி.ப. 3 மணிக்கு கொழும்பு - 01, 26ஆம் மாடியில் உள்ள இலங்கை வங்கி தலைமைக் காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறு இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் ந.சிவரத்தினம் கேட்டுள்ளார்.

மேற்படி நேர்முகப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன எனவும் மேலதிக விவரங்களுக்கு 021 222 2735, 021 222 3985 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார். (7)

## கனடா-இந்தியா அமைச்சர்கள் இலங்கை தொடர்பாகப் பேச்சு

புதுடில்லி, பெப்.12

இலங்கையின் வடபகுதி மக்களின் நிலை குறித்து இந்தியா தொடர்ந்தும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று அந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியை கனடா வெளிவிவகார அமைச்சர் லோரன்ஸ் கனொன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கை நிலைவரம் குறித்து கேட்டறிந்துள்ளார்.

அவ்வேளை வன்னி பொதுமக்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் பாதுகாப்புக் குறித்து இந்தியா தொடர்ந்தும் கவலை கொண்டுள்ளது என்றும் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பகிர்வே ஒரே வழியெனவும் முகர்ஜி கனடா வெளி விவகார அமைச்சரிடம் தெரிவித்துள்ளார் -என்று புதுடில்லியில் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## கொழும்பு நகரப் பாதுகாப்புக்கென வீடியோ கமராக்கள் பொருத்த ஏற்பாடு

கொழும்பின் பாதுகாப்புக்காக விசேட வீடியோ கமராக்கள் பொருத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு கட்டமாக முதலில் 28 'கமரா'க்கள் பொருத்தப்பட உள்ளன என சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் ஜயந்த இலங்ககோன் தெரிவித்துள்ளார்.

கொழும்புக்குள் பிரவேசிக்கும் பிரதான பாதைகள் மற்றும் முக்கிய நகரங்களில் இந்த 'கமரா'க்கள் பொருத்தப்பட உள்ளன எனவும் அவர் தெரிவித்தார்.


## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விசேட ஆங்கில சான்றிதழ் பாடநெறி - 2009

IPDT

Certificate Course of English for pre School Teachers

முன்பள்ளி பாலர்களுக்கு ஆரம்ப ஆங்கில மொழித் தேர்ச்சிகளான ஆங்கில உச்சரிப்பு, வாசிப்பு, எழுத்து, அபிநயப் பாடல், நாடகம், கதை கூறல், களச் செயற்பாடுகள் என்பவற்றை முன் பள்ளி ஆசிரியர்கள் கற்பிப்பதற்கான 3மாத கால பயிற்சி சான்றிதழ் பாடநெறி ஆரம்பமாகிறது. ஆர்வமுள்ளோர் 14.02.2009 சனிக்கிழமை எம் நிறுவனத்தில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

*226, கே.கே.எஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*பா.தனபாலன் (பணிப்பாளர்)*
*ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவனம்.*
*தொ.பே.: 0779360607*


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | | விண்ணில் |
|---|---|---|
| 18 ★ 11 ★ 1952 |  | 17 ★ 01 ★ 2006 |

அமரர் **சுப்பிரமணியம் ஜெயரட்ணம்**

(முன்னாள் சிரேஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை, யாழ்ப்பாணம்)

திதி: திருதியை (12.02.2009)

*பாதுகாப்புக் கடமையில் கண்ணாகியே*
*பாங்குடனே பணியாற்றி நீர்*
*எங்கள் குடும்பத்தின் குல விளக்காய் விளங்கி*
*ஒளி தந்து மறைந்து இன்றுடன்*
*மூன்றாண்டுகள் ஆகியதே*
*உங்கள் ஆத்ம சந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.*

*இல.31, கொண்டலடி லேன்,*
*நல்லூர் வடக்கு,*
*யாழ்ப்பாணம்.*

*உங்கள் நினைவுடன்....*
*மனைவி,*
*மகன் (கனோஜி).*

## மரண அறிவித்தல்

### இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன்

இரகுநாதக்குருக்கள் கேசவசர்மன் நேற்று முன்தினம் (10.02.2009) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் இரகுநாதக்குருக்கள் - ருக்குமணிபாமா தம்பதியினரின் மூத்த மகனும் தர்சிகாவின் அன்புக் கணவரும் வாசவசர்மன், தனுஷா, அனுஷா ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற கனகசபாபதிக்குருக்கள் மற்றும் அழகம்மாவின் பேரனும் தட்சணாமூர்த்திக்குருக்கள் - ராதா தம்பதியினரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.02.2009) வியாழக்கிழமை அவரின் மாமனாராகிய நா.சண்முகநாதக் குருக்களின் இல்லத்தில் (வவுனியா சிவன் கோவிலடி) நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சோ.நாகபூசணி
(அத்தை - நல்லூர்).

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பு

நிகழும் சர்வதாரி வருடம் தை மாதம் 17ம் நாள் (30.01.2009) வெள்ளிக்கிழமை முருகனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

**பிரம்மஸ்ரீ சுவாமிநாதக்குருக்கள் கனகசபாபதி ஐயர்**

அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை நாளை (13.02.2009) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்விற்கு தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*145, பருத்தித்துறை வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவினைக்கு ஆதரவளிக்கும் செய்திகளை தேசிய வானொலியில் ஒலிபரப்ப முடியாதாம்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத் தலைவர் கூறுகிறார்

கொழும்பு, பெப்.12

பிரிவினைவாதத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகின்ற, முழு நாட்டுக்கும் சாத்திய மற்ற செய்திகளை தேசிய வானொலியின் அலை வரிசைகள் மூலம் ஒலிபரப்புச் செய்ய முடியாதென இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க தெரிவித்துள்ளார். இது பற்றி அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு -

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினூடாக ஒலிபரப்பாகும் பி.பி.ஸி. தமிழோசை மற்றும் பி.பி.ஸி. சந்தேசிய ஆகியவற்றை முன்னறிவித்தல் எதுவுமின்றி பி.பி.ஸி. நிறுவனம் நிறுத்தியுள்ளது.

பி.பி.ஸி. நிறுவன அதிகாரிகளின் இந்தத் தீர்மானம் தொடர்பாக அவர்களிடமிருந்து எமக்கு இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வ அறிவித்தலும் கிடைக்கவில்லை.

புலிகளின் பிடியிலிருந்து தப்பி அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வரும் பொது மக்களைச் சோதனையிடுவதற்காக விசுவமடு சோதனைச் சாவடியில் அண்மையில் இடம்பெற்ற புலிகளின் தற்கொலைத் தாக்குதல் தொடர்பாக பி.பி.ஸியின் சந்தேசிய சிங்கள செய்திச் சேவையில் ஒலிபரப்பான செய்தி உண்மையை மூடி மறைப்பதாக அமைந்திருந்தது - என்றார்.

(அ-சி)

# விசுமடுத் தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் மறுப்பு

முல்லைத்தீவு, பெப். 12

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடுப் பகுதியில் பொதுமக்கள் மீது தாங்கள் தற்கொலைத் தாக்குதல் நடத்தவில்லை என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறை நேற்று நீண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த அறிக்கையை 'புதினம்' இணைத்தளம் வெளியிட்டுள்ளது.

அதில் அரச படையினரே தினமும் வன்னியில் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர் என்றும் - அதனை மூடி மறைத்து புலிகள் மீது பழிபோடும் நோக்கிலேயே அரசு பொய் பிரசாரத்தை முன்னெடுத்துள்ளது என்றும் புலிகளின் அரசியல்துறை குறிப்பிட்டிருக்கிறது.

'' மனித சமுதாயம் வெறுக்கத்தக்க இவ்வாறான செயலை நாம் புரியவில்லை என முற்றாக மறுக்கின்றோம். எமது பிரதேசத்துக்கான தொலைத்தொடர்புகளைத் துண்டித்து விட்டு தனது ஊடகங்களினூடாக ஸ்ரீலங்கா அரசு பொய்யான பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றது என்பதை சர்வதேச சமூகத்துக்குத் தெளிவுபடுத்த விரும்புகிறோம்.'' - என்றும் புலிகள் அதில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

(அ-சி)

## பாதுகாப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிப்பாளர்களைக் கொண்டு கண்காணிக்கும் வாய்ப்புக் குறித்து இவர் ஆராய்வார் என நம்பப்படுகின்றது என செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது.

இலங்கை நிலைவரத்தை நன்றாக அறிந்து கொண்டு இது தொடர்பாக பான் கீன் மூனுக்கு அவர் அறிக்கை சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(அ-1)

## பாதுகாப்புச் சபைக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல வெளிநாடுகளுக்கு விஜயம் செய்த பின்னர் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ-மூன் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை நியூயோர்க்கில் உள்ள தலைமை அலுவலகத்தில் ஊடகவிய லாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

அந்த மாநாட்டில் வைத்து 'இன்னர் சிற்றி பிறெஸ்' ஊடகத்தின் செய்தியாளர் மத்தி ரஸல் லீ, பான் கீ- மூனிடம் -

காஸா, கொங்கோ ஆகிய நாடுகளில் போர் நிறுத்தத்தை கோரியது போன்று, ஏன் பெரும் இரத்தக்களரி உண்டாகியுள்ள இலங்கையில் போர் நிறுத்தம் கோரவில்லை என்று கேட்டார்.

அப்போதே இலங்கை விவகாரம் குறித்து பாதுகாப்பு சபையின் நிகழ்ச்சிநிரலில் சேர்க்கப்படாமையால் தன்னால் போர் நிறுத்தம் கோர முடியவில்லை என்று பான் கீ- மூன் சொன்னார்.

இதேவேளை-

அதே ஊடகவியலாளர் சந்திப்பில் -

இராணுவ நடவடிக்கைகள் சர்வதேச சட்டத்துக்கு ஏற்ப நடத்தப்பட வேண்டும் என்று ஒரு சந்தர்ப்பத்திலும் -

ஈரான் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள் குறித்தும் பிரஸ்தாபித்த போது பிரச்சினைகள் பேச்சுவார்த்தை மூலமே தீர்க்கப்பட வேண்டும்; இராணுவ நடவடிக்கைகளால் அல்ல என்று மற்றொரு சந்தர்ப்பத்திலும் கருத்து வெளியிட்டார்.

### ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதி வந்தார்

அப்போதுபான் கீமூன் 'இன்னர்சிற்றி பிறெஸ்' செய்தியாளரிடம் மேலும் கூறியதாவது:-

''இலங்கை நிலைவரம் தொடர்பாக இரு வாரங்களுக்கு முன்னர் நியூயோர்க்கிற்கு விஜயம் மேற்கொண்ட அந்த நாட்டின் சிறப்புப் பிரதிநிதியுடன்(பஸில் ராஜபக்ஷவுடன்) ஆராய்ந்தேன்.

மேலும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனும் இந்த விடயம் தொடர்பாகத் தொலைபேசியில் தீவிரமாக ஆராய்ந்தேன்.

அவர் பொதுமக்களுக்கு இழப்பு ஏற்படுவதைத் தவிர்க்கவேண்டும், மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கும் உதவ வேண்டும். இதன் மூலம் அவர்களைப் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றலாம் எனத் தெரிவித்திருந்தேன்.

### ஒத்துழைப்பை நல்குவதாகத் தெரிவித்தார்

அவர் தன்னுடைய முழு ஒத்துழைப்பையும் வழங்குவார் எனத் தெரி வித்திருந்தார்.

இலங்கையில் அளவுக்கதிகமான உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. இதுவே நியாயபூர்வமாகச் சிந்திக்கும் அனைவரினதும் கருத்தாகும்.

இலங்கை விவகாரம் பாதுகாப்புச் சபையின் நிகழ்ச்சிநிரலில் இடம்பெறவில்லை. நாடொன்றின் இறைமையை மதிப்பது என்ற விடயத்தை எனது முக்கிய கொள்கையாகக் கொண்டுள்ளேன்.

எனினும் இலங்கை மற்றும் காஸா நிலைவரங்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் ஆளுகைக்கு உட்பட்ட விடயங்களாகும்.

சர்வதேச தராதரங்கள் மீறப்படுதல் தொடர்பாக நான் தொடர்ச்சியாக எனது ஆழ்ந்த கண்டனத்தைத் தெரிவித்து வந்துள்ளேன்.

### குறைந்தளவிலேயே தகவல்கள் கிடைத்துள்ளன

இலங்கையில் தொடரும் முறைகள் தொடர்பாக தொடர்ச்சியாக எனது கவலையைத் தெரிவித்து வந்துள்ளதுடன் இராணுவத் தீர்வல்ல, அரசியல் தீர்வே அவசியம் என்பது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளேன்.

இலங்கையில் காணப்படும் நிலைவரம் குறித்து குறைந்த எண்ணிக்கையிலேயே தகவல்கள் வெளியாகியுள்ளன.

எந்த மோதல் சூழ்நிலையிலும் நீங்கள் முதலில் அறிய விரும்புவது உண்மை நிலைவரம் எவ்வாறானதாக உள்ளது என்பதையே - என்றார்.

(அ)

Scc யின் கணினி பயிற்சி நெறிகள்
பயிற்சி ஆரம்பம் 14.02.2009
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
♦Chip & Card level Trouble shooting
♦Assembling ♦Variours Mother Board Handling
♦Upgrading ♦Fault Finding ♦Repairing ♦Servicing
♦Printer, Scanner & Com device management
♦Software Installation
♦Configuring Internet Interfacing & Trouble shooting
♦Networking & Etc...
DIPLOMA IN AUDIO & VIDEO EDITING
♦Adobe Photoshop ♦Adobe Premier ♦Cool3D Studio ♦pinnacle Studio ♦VCD Cutter ♦ Capturing
DIPLOMA IN ACCOUNTING PACKAGES
♦Tally ♦Quick Books ♦Accpack ♦MYOB
DIPLOMA IN AUTOCAD
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

## தமிழர் கொலைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருங்கிணைப்பாளர் டி.மோகன் உட்பட எண்மர் அடங்கிய குழுவினர் கடந்த செவ்வாய்க்கிழமை அமைச்சர் ராயிசிடம் இந்த மனுவை சமர்ப்பித்து இந்த விடயத்தில் மலேசியா கொண்டிருக்க வேண்டிய கடப்பாட்டை விளக்கினர் என இணையத் தளத் தகவல் தெரிவித்தது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கையில் போர் என்ற பெயரில் அப்பாவி மக்கள் கொல்லப்பட்டு வருகின்றனர். இராணுவத்தின் கண்முடித்தனமான குண்டு வீச்சினால் மக்கள் உயிர்ச் சேதம் அதிகமாகி வருகின்றது.

இந்நிலையில் மலேசியா மனிதாபிமான அடிப்படையில் இலங்கை விவகாரத்தில் தலையிட்டு போரை முடிவுக்குக் கொண்டு வருவதுடன், காயமுற்ற அப்பாவி மக்களுக்குத் தேவையான மருந்துப் பொருள்கள் மற்றும் உணவு வகைகள் சென்று சேர்வதை உறுதி செய்ய வேண்டும் .

மலேசிய மக்களுக்கும் இலங்கைக்கும் இடையே நிலவும் நீண்ட வரலாற்றுப் பூர்வ உறவுகளைக் கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் இந்தப் பிரச்சினையில் குறிப்பாக போரை முடிவுக்குக் கொண்டு வருவதில் மலேசிய அரசு மத்தியஸ்தம் செய்ய வேண்டியது அவசியம் - என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மலேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் டத்தோ சிறீ ராய்ஸ் யாத்திமிடம் வழங்கப்பட்ட அந்த மனுவின் விவரம் வருமாறு -

கடந்த மாதம் முதற் கொண்டு வடக்கு - கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை இராணுவம் மிகக் கடுமையான தாக்குதல்களை நடத்தி வருவதால் அளவு கடந்த நிலையில் மனிதப் பேரவலங்கள் நிகழ்ந்து வருகின்றன.

அனைத்துலக நாடுகளால் தடை செய்யப்பட்ட மிக மோசமான அழிவுகளை மனித அழிவுகளை ஏற்படுத்தக் கூடிய கிளஸ்ரர் எனப்படும் கொத்துக்குண்டுகள் இப்பகுதியில் தமிழர்களுக்கு எதிராக பயன்படுத்தப்பட்டிருக்கும் அதிர்ச்சி தரும் உண்மை அம்பலத்திற்கு வந்துள்ளது.

பாதுகாப்பான பகுதிகள் என அரசே அறிவித்த பகுதிகளுக்குத் திரும்பிய தமிழ் மக்களுக்கு எதிராகவும் குண்டு வீச்சுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டு எண்ணற்றோர் உயிர் இழந்த சம்பவங்கள் நடந்துள்ளன.

மருத்துவமனைகள் மீதும் தாக்குதல்கள் நடத்தப்பட்டு நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் மாண்டுள்ளனர். இந்த போர்ப் பகுதியில் சிக்கிக் கொண்டுள்ள இரண்டரை லட்சம் மக்களின் நிலை குறித்து ஐக்கிய நாடுகள் சபையும் அனைத்துலக நிவாரண அமைப்புக்களும் கவலையைத் தெரிவித்துள்ளன.

இரு தரப்புக்கும் இடையிலான போரில், மருத்துவமனைகள், அவசர உதவி மருத்துவ வாகனங்கள் சிக்கி சேதமடைந்துள்ளன. காயமடைந்தவர்களின் உயிரைக் காப்பாற்றும் வாய்ப்பும் வசதியும் இல்லாத நிலை நீடிக்கிறது என்று தென்னாசிய செஞ்சிலுவைச் சங்கம் கூறுகின்றது.

இப்பகுதிகளிலும் பொதுமக்களுக்கான மருந்து, உணவு உள்ளிட்ட அவசர உதவிகளைச் செய்வதில் ஈடுபட்ட ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அனைத்துலக உணவுத் திட்ட தொண்டர் பணியாளர்கள் தங்களது மனிதாபிமான பணியைச் செய்ய முடியாமல் அங்கிருந்து வெளியேறி விட்டனர்.

இந்தச் சூழ்நிலையில், இலங்கையில் போரை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அனைத்துலக சமுதாயம் கோரிக்கை விடுத்து வருவதால், மலேசியாவும் இந்த அனைத்துலக சமுதாயத்தின் குரலுடன் இணைந்து போரை நிறுத்தும்படி இலங்கை அரசை கேட்டுக்கொள்ள வேண்டும். போர் நிறுத்தப்பட்டு, மனிதாபிமான உதவிகளுக்கு வழிவிடப்பட வேண்டும்.

ஆனால், இலங்கை அரசு போர் நிறுத்த கோரிக்கைகளை நிராகரித்து விட்டு, போரில் ஈடுபட்டுள்ள போராளிகளை முற்றாக நசுக்கப் போவதாக கூறி வருவதை நாங்கள் கவனத்தில் கொண்டுள்ளோம்.

இனம், நிறம், சமயம், பண்பாடு பொருளாதார வேறுபாடுகள், அரசியல் மாறுபாடுகள் என்ற பிரச்சினைகளுக்கு அப்பால் ஐக்கிய நாடுகள் சபையில் இடம் பெற்றுள்ள எல்லா நாடுகளிலும் மனித உரிமையைப் பாதுகாக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபைக்கு உண்டு. மனித சமுதாயத்தின் நாகரிகத்தையும் மாண்புகளையும் மேலும் மேலும் மேம்படுத்த வேண்டியது ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையின் கடமை.

மனித உரிமைக்கு எதிராக அநீதி எப்போது நடந்தாலும், எங்கே நடந்தாலும் அதனை தடுத்து நிறுத்தி மனித உரிமைகளைப் பாதுகாக்கவும், அதனை மேம்படுத்தவும், உயரிய பங்கினை ஆற்றவும் மலேசியாவால் முடியும் என நம்புகின்றோம் - என்றுள்ளது.

(அ-சி)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முகாம்களைச் சேர்ந்த 1460 அகதிகள் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் பங்கேற்றனர்.

உண்ணாவிரதம் மேற்கொண்டவர்களில் 600 பேர் பெண்கள், 250 பேர் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஈழத்தமிழரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு -

இலங்கை அரசின் கொடூர இராணுவத் தாக்குதலுக்கு ஆளாகும் தமிழர்களை நினைத்து ஒட்டு மொத்தத் தமிழ்ச் சமுதாயத்தின் நெஞ்சில் வேதனைத் தீ பற்றி எரிகிறது.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் பான் கி மூன், இராணுவத் தாக்குதலில், அப்பாவித் தமிழ் மக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்படுகிறார்கள் என்றும், சர்வதேச மனிதாபிமான சட்ட விதிகளை, இலங்கை அரசு கடைப்பிடிக்க வேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதியிடம் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட, இந்திய அரசு தலையிட வேண்டும் என கனடாவின் வெளிவிவகார அமைச்சர், இந்திய வெளியுறவு துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜியிடம் வற்புறுத்தியுள்ளார்.

போர் நிறுத்தம் செய்யுமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளிண்டனும், இங்கிலாந்து வெளிவிவகார அமைச்சர் டேவிட் மிலிபேண்டும் கூட்டு அறிக்கை விடுத்த பின்னரும் தாக்குதல்கள் தொடர்கின்றன.

உலக நாடுகளின் கண்டனத்துக்கும், வெறுப்புக்கும் ஆளாகி வரும் இலங்கை அரசு அதிலிருந்து தப்பிக்க விடுதலைப் புலிகள் தான் அப்பாவித் தமிழர்களைக் கொல்கிறார்கள் என்று கோயபல்ஸ் பாணி பொய்ப் பிரசாரத்தை இரண்டு நாள்களாகச் செய்து வருகிறது.

இலங்கை அரசின் அராஜகத்தை, வெளி உலகத்துக்குத் தெரிவித்ததற்காக, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அலுவலர்கள், பணியாளர்கள் 300 பேர்களை, முல்லைத்தீவில் இருந்தே வெளியேற்றப்பட்டனர். மொத்தமாகத் தமிழ் இனத்தைக் கொன்று தமிழ் ஈழத்தையே சுடுகாடாக மாற்ற மஹிந்த திட்டம் போட்டு விட்டார்.

### போர் நிறுத்தம் குறித்துக் கூற இந்திய அரசு தயாரில்லை

போர் நிறுத்தம்தான் ஒரே வழி என்பதை நன்றாக அறிந்திருந்தும், இந்திய அரசு அதை சொல்லத் தயாராக இல்லை.

ஏனெனில், விடுதலைப்புலிகளை அழிப்பது தான் இந்திய அரசின் நோக்கம். நான் தொடர்ந்து நான்கு ஆண்டுகளாகக் குற்றம் சாட்டுகின்றபடி, இலங்கையில் கொல்லப்படுகின்ற ஒவ்வொரு தமிழனின் சாவுக்கும், அவன் சிந்துகின்ற ஒவ்வொரு சொட்டு இரத்தத்துக்கும், இந்திய அரசு, குறிப்பாக தலைமை தாங்குகின்ற காங்கிரஸ் கட்சிதான் பொறுப்பாளி.

எனவே, இந்திய அரசின் துரோகத்துக்குக் கண்டனம் தெரிவிக்கவும், வதைபடும் ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க, அகில இந்திய அளவில், ஆதரவு திரட்டவும், உண்மை நிலைமையை இருட்டடிப்புச் செய்யும் டில்லி ஊடகங்களின் பொய்ப் பிரசாரத்தைக் கடந்து, இந்திய மக்களுக்கு உண்மையைத் தெரிவிக்கவும், தலைநகர் டில்லியில் இந்திய நாடாளுமன்றத்துக்கு அருகில் ஜந்தர் மந்தரில் பெப்ரவரி 13ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று, ம.தி.மு.க. சார்பில் என்னுடைய தலைமையில் மிகப்பெரிய உண்ணாவிரத அறப்போர் காலை எட்டு மணி முதல் நடைபெறுகிறது.

இந்த அறப்போரில் பங்கேற்பதற்காக, ஏற்கனவே தமிழ்நாட்டில் இருந்து 2000க்கும் மேற்பட்டோர் டில்லிக்குப் புறப்பட்டு சென்றுவிட்டார்கள். பல்வேறு கட்சிகளின் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்த அறப்போருக்கு ஆதரவு தெரிவித்து, ஈழத்தமிழர்களைக் காக்க உரை ஆற்றுவார்கள் - என்றுள்ளது.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 12.02.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org